THAYAGAM

1 . 10 . 93

75¢

உண்மை:5
தேடல்:13

# தாயகம்

## யாழ்தேவி தாக்குதல் ஆரம்பம்

## ஆனையிறவில் பலத்த மோதல்

## 400 பேர் வரை பலி

புலிகள் கடும் பதில் தாக்குதல்
4 டாங்கிகள் அழிக்கப்பட்டன

## பொதுமக்கள் வாழும் பகுதியில் குண்டுவீச்சு

## இந்தியாவில் பூகம்பம் 22 ஆயிரம் பேர் பலி

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**

**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி விநியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

# ஆனையிறவில் தாக்குதல் நானூறுக்கும் மேல் பலி யாழ்தேவி நகர்கிறது

வடபகுதி மீது இலங்கை இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருக்கிறது. யாழ்தேவி என்ற பெயரிடப்பட்ட இந்த தாக்குதலின் போது ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவம் வெளியேறி யாழ்ப்பாணத்தை நோக்கி நகர முயற்சித்தது. முப்படைகளும் கூட்டாக நடத்தும் இத்தாக்குதலில் நகர முயலும் இராணுவத்திற்கு விமானப்படை விமானங்களும் கடற்படைப் படகுகளும் உதவி புரிந்தன. கடந்த செவ்வாய்க்கிழமை இந்த தாக்குதல் ஆரம்பமானது. ஆரம்ப செய்திகளின்படி இந்த தாக்குதலில் முன்னூறுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். ஆயினும் படையினர் பாரிய முன்னேற்றம் எதையும் காணவில்லை என்றே தெரிவிக்கப்படுகிறது. அரச தரப்பில் 8 மைல்கள் முன்னேறியதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் இராணுவ அதிகாரி ஒருவர் 'ஓரளவு' முன்னேறியதாகக் கூறி தூரத்தை கூற மறுத்து விட்டார்.

இரண்டு வருடங்களின் பின்னர் நடத்தப்படும் பாரிய இராணுவத் தாக்குதல் இதுவாகும்.

சாவகச்சேரிப் பகுதி வரை முன்னேறி கிளாலிக் கடல் போக்குவரத்தைத் துண்டிப்பதே இதன் நோக்கமாகும்.

பளைப் பகுதியில் புதன்கிழமை தாக்குதல்கள் நடைபெற்றன.

மூவாயிரம் பேர் கொண்ட இராணுவ அணி யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தது. இத்தாக்குதலில் 150 புலிகளும் 125 படையினரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக 91 படையினர் கொல்லப்பட்டதாகவும் இதில் ஆறு பேர் அதிகாரிகள் என்றும் 140 பேர் காயமடைந்த தாகவும் தெரிவித்தது. இத்துடன் விமானத் தாக்குதல்களினால் 39 பொதுமக்கள் இறந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. கொல்லப் பட்டவர்களில் பாதுகாப்பு செயலாளர் ஹமில்டன் வணசிங்கவின் மருமகன் கப்டன் நறின் ஜயதிலகவு,ம் கொல்லப்பட்டார். அத்தோடு பெண் புலிகளின் முகாம் ஒன்றையும் தகர்த்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறின.

இறந்த பொதுமக்களில் பலர் யுத்த முனைக்கு அருகில் நடந்த விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். விமானத் தாக்குதலின் போது பாதுகாப்புத் தேடி பங்கர் ஒன்றில் தஞ்சம் தேடிய மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பங்கர் இடிந்து விழுந்து இருபது பேர் கொல்லப்பட்டனர். சங்கத்தானையில் நடந்த இந்த தாக்குதலில் ஏழு பேர் காயங்களுடன் தப்பிக் கொண்டனர்.

நந்தாவில் கிராமத்தில் கோவில் மீது நடந்த தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டனர். அருகில் உள்ள பாடசாலையின் மீது நடந்த விமானத் தாக்குதலில் பதினேழு குழந்தைகள் காயமடைந்தனர்.

தரைமீது படைகள் நகர

2ம் பக்கம் பார்க்க..

# இந்தியாவில் பூகம்பம் 22 ஆயிரம் பேர் பலி

**இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் இடம் பெற்ற பூமியதிர்ச்சி காரணமாக ஆறுயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதுவரையும் மகாராஷ்டிராவில் மட்டும் ஆயிரம் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.**

றிஸ்ரர் அளவின்படி 6.4 அளவிலான இந்த பூமியதிர்ச்சி இந்திய உபகண்டத்தில் 1935க்குப் பின்னர் ஏற்பட்ட பூமியதிர்ச்சியாகும். மகாராஷ்டிராவில் உமர்கா, கிலாரி ஆகிய இடங்களில் மட்டும் மூவாயிரம் பேர் இறந்துள்ளனர். அத்துடன் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.56 க்கு நடைபெற்ற இந்த பூமியதிர்ச்சியால் பல கட்டடங்கள் இடிந்ததால் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த பலர் கொல்லப்பட்டனர்.

இந்த அதிர்ச்சியால் பம்பாய், பங்களூர், சென்னை ஆகிய இடங்களில் மக்கள் பாதிக்கப்பட்டனர். நிலம் நடுங்கத் தொடங்கியதும் இப்பகுதிகளில் உள்ளவர்கள் அச்சத்தில் வீதிகளுக்கு ஒடி வந்தனர்.

1934 இல் பீகார், நேபாளத்தில் நடைபெற்ற பூகம்பம் றிஸ்டர் அளவில் 8.4 ஆகும். இதில் 10 ஆயிரம் பேர் இறந்தனர். 1935 இல் 7.5 அளவிலான பூகம்பம் குவேட்டாவில் நிகழ்ந்தது. இதில் முப்பதாயிரம் பேர் இறந்தனர். இந்திய நேபாள எல்லையில்

ம.ப.பா..

## திருமலை,மன்னாரில் தாக்குதல்

மன்னாரில் வங்காலைப் பகுதியில் இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் ஒன்றை அமுல்படுத்திய பின்னர் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வங்காலையின் தென்பகுதியில் உள்ள பகுதிகள் தற்போது இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இத் தாக்குதலில் இராணுவ விமானங்களும் ஈடுபட்டிருந்தன.

திருமலையில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் இரண்டு விமானப்படையினர் புலிகளால் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த தாக்குதல் மொரவேவாவில் நடைபெற்றது.

திருமலையில் நடைபெற்ற இன்னொரு தாக்குதலில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

## ஜனதா கட்சிகள் இணைந்தன

அடுத்த இந்தியத் தேர்தலுக்காக இந்திய ஜனதா தளத்தின் மூன்று பிரிவுகள் இணைந்துள்ளன. வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளமும் அஜித் தலைமையிலான பிரிவும் சந்திரசேகரின் சமாஜவாதி ஜனதாக் கட்சியும் இணைந்துள்ளன. ஆயினும் நான்காவது குழுவான முலாயம் சிங் யாதவின் கட்சி இணையவில்லை.


காசியாபாத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட இவை சம்மதம் தெரிவித்துள்ளன.

யாதவ் உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் ஆவர். இவர் அரிஜன மக்களிடையேயும் முஸ்லிம் மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றவர். உத்தரப் பிரதேசம், ராஜஸ்தாண், இமாச்சல் பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகியவற்றில் நடைபெறவிருக்கும் தேர்தலில் முலாயம் சிங் யாதவ் தனியே போட்டியிட முடிவு செய்திருக்கிறார்.

## இளைஞர்கள் கொழும்பில் கைது


கொழுமபில் உள்ள அகதி முகாம் ஒன்றில் பொலிசார் நடத்திய வேட்டை ஒன்றில் 97 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்று கூறியே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த மூன்று வருடங்களாக அங்கே வசித்து வரும் இவர்களில் ஆண்களும் பெண்களும் அடங்குவர். முப்பது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.


WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL











DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.

VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

# இப்படியும் சேதிகள்-

**ஜனமித்திரன்**

1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிவழிப் போராட்டத்தின் மீது பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மாணவன் ஒருவனைப் படுகொலை செய்தனர். தம்மால் செய்யப்பட்ட படுகொலையை நியாயப் படுத்துவதற்காக, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இராணுவ தலைமையகம் உட்பட முக்கிய ஸ்தானங்கள் மீது தாக்குதல் தொடுக்க திட்டமிட்டுள்ளதாக காட்டக் கூடிய குறிப்புகளை அக்காலத்தில் கொழும்பு பிரதேசத்துக்கு பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ் அதிபர் தானே தயாரித்து எழுதி, கொல்லப்பட்ட மாணவனின் காற்சட்டை பைக்குள் திணிந்த சம்பவமொன்று அம்பலமாகியுள்ளது.

பொலிஸ் அதிபராக நியமனம் பெறுவதற்கு வேண்டிய தகைமைகள் இருந்தும் அப்பதவி வழங்கப்படாதது மட்டுமன்றி ஒய்வு பெறவேண்டிய காலத்துக்கு முன்னரேயே கட்டாய ஒய்வில் அனுப்பப்பட்டதற்கும் இச்சம்பவம் காரணமாக அமைந்ததாகவும் அறிய முடிகிறது.

1985 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் அமைதியான முறையில் எதிர்ப்பார்ப்பட்ட ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. கொழும்பு ஹவ்லொக் நகரில் அமைந்துள்ள அக்குயனாஸ் மாணவர் விடுதிக்கு அருகாமையில் ஊர்வலத்தினர் மீது பொலீசார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தால் ரோகண இரத்னாயக என்னும் மாணவன் உயிர் இழந்தான். எவ்விதத்திலும் முறையைத் தூண்டாமல் அமைதியாக நடைபெற்ற இவ் மாணவர் ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு கட்டளையிட்ட உயர் பொலீஸ் அதிகாரிகள் இச் சம்பவத்துக்கு பதிலளிக்கவேண்டிய நிலையில் இருந்தனர். அக்காலகட்டத்தில கொழும்பு பிரதேசத்துக்கு பொறுப்பாக செயல்பட்ட பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தனவும் உப பொலீஸ் அத்தியட்கர் லால் இரத்னாயகவும் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

இப் பொலீஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்த மாணவனின் காற்சட்டை பைக்குள் சில குறிப்புகளைக் கொண்ட கடதாசியொன்றை திணித்தனர். அதன் பின்னர் அக்குறிப்பை சாட்சியமாக பாவித்து இராணுவ தலைமை பணியகத்தையும் முக்கியமான அரசாங்க கட்டடங்களையும் தாக்குவதற்கு மாணவர்கள் திட்டமிட்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தியதன் மூலம் மாணவர் ஊர்வலத்தின் மீதான பொலீசாரின் துப்பாக்கி பிரயோகத்தை நியாயப்படுத்தினர்.

அத்துடன் திருப்திப்படாத பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தன விசாரணை தொடர்பான தமது அறிக்கையை பொலீஸ் மா அதிபருக்கு சமர்ப்பிக்கவேண்டிய பொறுப்பையும் தட்டிக் கழித்து நேராகவே ஜனாதிபதி ஜெயவர்தனவின் வோட் பிளேஸ் இல்லத்துக்குச் சென்றார். தான் கண்டு பிடித்த குறிப்புக் கடதாசியை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பித்தார். தலைநகரான கொழும்பை மட்டுமன்றி முழுநாட்டையும் ஆபத்திலிருந்து மீட்டதற்கு பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தனவின் விசாரணையே காரணம் என்பதால் எவ்வித உலோபத்தனமும் இன்றி பிரதிப் பொலீஸ் அதிபரை புகழ்ந்தார். பொலிஸ் மா அதிபருக்கு கூட தான் கண்டு பிடித்ததை அறிவிக்காமல் எவ்வித தாமதமுமின்றி தன்னை நோக்கி வந்ததற்காக நன்றியையும் கூறினார்.

இன்னும் சில மாதகாலத்தில் பொலீஸ் மா அதிபர் உருத்ரா ராஜசிங்கம் ஒய்வு பெறுவதால் அதன் பின்னர் தானே பொலீஸ் மா அதிபராக நியமனம் பெறுவதாக எட்வேட் குணவர்தன கனவு கண்டார். இதனிடையே ஜனாதிபதி ஜெயவர்த்தன இரகசிய பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதிப் பொலீஸ் அதிபர் ஹேர்பர்ட் வீரசிங்க அவர்களை தனது இல்லத்துக்கு வரவழைத்தார். பிரதிப் பொலீஸ் அதிபரது விசாரணை அறிக்கையையும் தாக்குதல் தொடர்பான குறிப்புக் கடதாசியையும் அவரிடம் வழங்கிய ஜனாதிபதி, சம்பவம் தொடர்பாக பூரணத்துவமானதும் பக்கசார்பற்றதுமான அறிக்கை சமர்பிக்குமாறு கூறினார்.

விசாரணையின் பொறுப்பு இரகசிய பொலீஸ் அத்தியட்சகர் ஆ.ஹு.ரு ராஜபக்ச அவர்களுக்கு வழங்கபட்டதோடு தாக்குதல் தொடர்பான கடதாசியில் காணப்பட்ட கை எழுத்துப் பற்றி சந்தேகம் எழுந்தது. மாணவர்களுடைய பொதுவான கையெழுத்து குறிப்பு கடதாசியில் காணப்பட்ட எழுத்துக்களுடன் பொருந்துவதாக காணப்படவில்லை குறிப்புக் கடதாசியில் காணப்பட்ட எழுத்துக்களும் விசாரணைகளில் பங்கு கொண்ட உதவி பொலீஸ் அத்தியட்சகர் லால் இரத்னாயகவினுடைய சிங்கள எழுத்துக்களும் சந்தேக பதிவேட்டு புலன் விசாரணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவ் எழுத்துகள் ஒன்றுக்கு ஒன்று பொருந்தவில்லை. இதன் பின்னர் பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தனவின் கையெழுத்துக்களை பரீட்சிக்க இரகசிய பொலீசார் தீர்மானித்தனர். பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தனவின் பதிவுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் காணப்பட்டிருந்தது. பிரதிப் பொலீஸ் அதிபர் முன்பு கடமையாற்றிய பொலீஸ் நிலையங்களைத் தேடிச் சென்றனர். இறுதியாக அவர் கேகாலை பிராந்தியத்தில் உதவி பொலீஸ் அத்தியட்சகராக சேவையாற்றிய காலத்தில் பதியப்பட்ட அவரது சிங்களக் கையெழுத்துக்களை கொண்ட குறிப்புகளைக் கண்டு பிடித்தனர். துப்பாக்கி பிரயோகத்தால்

**10ம் பக்கம் பார்க்க..**



# முனியின் பதில்கள்

மே தினத்தை மாற்றி முதல் வருடத்தில் கொண்டாடிய ஜனாதிபதி அவர்கள், தவறாது அதே தினத்தில் தன்னையும் சேர்த்துக் கொண்டாட வேண்டும் என்று மேல் உலகம் சென்றதைப் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?
ப.காங்கேய சர்மா
மொனறியால்
*மேதினத்தை மாற்றிவிடலாம் விதியை மாற்றிவிட முடியாது.*

தனது புகழுக்கு மேம்பட எவரும் இருக்கக் கூடாது என்று விரும்பிய பிரேமதாச மறைந்துவிட்டார் இதே மனப்பான்மை கொண்ட மறையக்கூடிய தலைவர் யார்?
ப. காங்கேயசர்மா
மொன்றியால்
*நீர் யாரை நினைக்கிறீரோ அவரையேதான் நானும் நினைக்கிறேன் (நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்)*

கனடாவில் வெளியாகும் பத்திரிகை ஒன்று 24 பக்கங்களுடன் வெளிவந்து 12 பக்கம் விளம்பரமாகக் கொண்ட பெருமை அதற்குரியது. அவர்கள் விளம்பரம் என்ற தனி வெளியீடு செய்தால் கண்காட்சி வைக்கும்போது சிறப்பு விடுமுறைப் பெறலாமே! தங்கள் கருத்து என்ன?
ப. காங்கேய சர்மா
மொன்றியால்
*அந்தப் பத்திரிகையில் 'வெயிட்' டான விடயமே விளம்'பாரம்' தான் (இங்குள்ள சில அமைப்புகள் வழங்கும் விருதுகளைப் பெறுபவர்கள் அதையும் தமது விளம்பரங்களில் விளம்பரிக்கிறார்கள் பரவாயில்லை. ஆனால் எந்த விருதும் கொடுக்கப்பட்ட வருடத்திற்கானது மட்டுமே தவிர எப்போதும் செல்லுபடியாகும் என்ற ரீதியில் விளம்பரம் செய்வது தவறல்லவா! ஐம்பதாம் ஆண்டின் அழகுராணி தொண்ணூறும் ஆண்டிலும் நான்தான் அழகுராணி என தெரிவு செய்யப்பட்டவள் என்று சொல்வதுபோல அபத்தமாக சில விளம்பரங்கள் தெரிகின்றன)*

பாலஸ்தீனியர்களும் இஸ்ரேலியர்களும் சமாதான ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் பாலஸ்தீனியர்களுகக் தனி நாடு கிடைக்கும் என இஸ்ரேல் கூறுகிறது இவையெல்லாம் நடக்க கூடியதா?
எஸ் சிவகுமார் ஸ்காபரோ
*'சுட்ட' மண்ணும் 'பச்சை' மணலும் ஒட்டிவிட்டன. பாலஸ்தீனியர்கள் இதுவரை செய்த ஒரே ஒரு உருப்படியான காரியம் இதுதான்.*

ஒன்டாரியோ மாநிலத்தில் N D P அரசு, தனது பல தேர்தல் வாக்குறுதிகளை மீறி அதிருப்தியை பெற்றுக் கொண்டு வருகிறது. இது கனடாவில் இடதுசாரி அரசியல் கொள்கைகளை பலவீனப்படுத்துகிறதல்லவா! பொப் ரே ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?
எஸ்.சிவகுமார் ஸ்காபரோ
*இதற்கு முந்திய அரசுகளின் கொள்கைகளால் உடைந்திருக்கும் பொருளாதார சில்லை உருட்டி விட பொப்ரே முயல்கிறார்.* Backlash *வருவது சகஜமே.* Forward action *பெரியதாயிருந்தால்* Backlash*ஐ வெல்ல முடியும் என்கிறது இயக்கவியல்.*

வேறு இயக்கங்கலிருந்து விட்டு வந்து விலகி அமைதியாக வாழ்ந்த பலரைக்கூட புலிகள் கொன்றிருக்கிறார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளுக்கு ஏன் இந்த வெறி?
கே.கே. ஸ்காபரோ
*அப்பாவி ஆடு ஒன்றை ஒநாய்*

கொல்லப் போனதாம். ஆடு அழுது கொண்டே இரக்கம் காட்டச் சொல்லிக் கேட்டதாம் "உங்கம்மா ஐந்து வருடத்துக்கு முன்னால் இந்த குட்டையைக் கலக்கி விட்டார்.... அதற்குப் பழிக்குப் பழியாக உன்னை கொல்ல போகிறேன்..." என்று காரணம் சொல்லிவிட்டு ஓநாய் ஆட்டைக் கொன்று தின்றதாம். இதிலிருந்து அறியப்படும் (அ)நீதி என்னவென்றால் ஓநாய் ஆட்டைக் கொல்வதற்கு தீர்மானித்து விட்டால் காரணம் ஏதாவது சொல்லியே தீரும் ஓநாய்க்குப் இரத்தப் பசி...)

**துப்பாக்கி சுடும் தமிழ்ப்படக் கதாநாயகர்களுக்கும், எமது இயக்க போராளிகளுக்கும் என்ன ஒற்றுமை?**
**கே.கே. ஸ்காபரோ**
இருவருமே சொந்தப் பெயரில் மக்களுக்கு அறிமுகமாவதில்லை, ஒரே ஷூட்டிங்.... ஷூட்டிங்... ஷூட்டிங்தான்.

**கனடாத்தமிழர்கள் எதை வளர்க்கிறார்கள்?**
**புதுமை விரும்பி**
**ரொரன்டோ**
யாழ்ப்பாணக் கலாச்சாரத்தை!

**முன்பு நாட்கள் உபயோகித்து கழித்தது போன்ற பெல்பொட்டம் ட்ரௌவ்ஸர்களை இப்போது கனடாவில் நாகரீக உடையாக அணிகிறார்கள். இது எப்படி இருக்கு?**
**புதுமை விரும்பி ரொன்டோ**
அறுபதுகளில் இருந்த உடைகள், பாடல்கள் எண்பதுகளில் மீள நாகரீகமடைந்தன. பின்பு எழுபதுகளிலிருந்த நாகரீகம் இப்போது தொண்ணூறுகளில் பிரபலமடைகிறது பழையவை மீண்டும் புதியவையாக வரும்போது இன்பமே தனி! (அன்று கேட்ட "வள்ளலைப் பாடும் வாயால்... என்ற தியாகராஜபாகதவர் பாட்டுப் போலத்தானே இன்றைய "உசிலம்பட்டி பெண்குட்டி முத்துப்பேச்சி ..." என்ற பாடல் இருக்கிறது)

**கனடா தேர்தலில் கிம் காம்பெல் வெல்வதற்கு சாத்தியமுண்டா?**
**எம்.செல்வராஜ்,**
**ரொறன்ரோ**
பிரதம மந்திரி கிம் காம்பலின் ஸ்டைல் பல கனடியர்களுக்கு பிடித்திருக்கிறதாம் என்று சமீபத்தைய அபிப்பிராய வாக்கெடுப்பு கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (நாட்டை ஆள ஸ்டைலே போதும் என்று நினைப்பவர்கள் இருப்பதால் தான் ரஜனிகாந்த் கூட தூக்கமின்றி தவிக்கிறார்)

**தென்னாபிரிக்காவிலும் சரி, இஸ்ரேலிலும் சரி தற்போது மேற்கொள்ளப்படும் புதிய அரசியல் கொள்கையின் அடிப்படைக் காரணி என்ன? அமெரிக்கா தானே?**
**எம்.செல்வராஜ்**
இல்லை, சோவியத் யூனியனின் மறைவு

**இன்றைய உலக வரலாற்றை நோக்கிப் பார்த்து புலிகளுக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?**
**எம்.செல்வராஜ்**
நண்பனை போட்டியாளாக்குவதை விட போட்டியாளனை நண்பனுக்கிக் கொள்

**நம்ப முடியாத தமிழ்ப் படத்தைப் பற்றி அடிக்கடி எழுதுகிறீரே..**
**பிரகாஷ், ரொறன்ரோ**
சேலை கட்டிய மாதரை கொஞ்ச நேரமாவது தமிழ்ப் படத்தில் தானே ஐயா பார்க்க முடிகிறது. (தமிழ்ப் படம் நம்ப முடியாததுதான்.. சமீபத்தில் ரொறன்ரோவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று. 35 வருடங்களுக்கு முன் பாலகர்களாகப் பிரிந்த இருவர் கடந்த பதினெட்டு வருடங்களாக ஒருவரை ஒருவர் தெரியாமலேயே ஓரே தொழிற்சாலையில் வேலை பார்த்திருக்கிறார்கள். சம்பாசணையின் போது அதிட்டவசமாக உண்மை தெரியவந்து சென்ற வாரம் தான் இரண்டு சகோதரர்களும் சேர்ந்திருக்கிறார்கள்)

**அமிர்தலிங்கத்தின் கொலையை புலிகள் உரிமை கோரியிருக்கிறார்களே..**
**ஜோ, மொன்றியல்**
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றானதா இல்லை ஆகப் போகிறதா என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**கனடாவிலும் சாதிப்பிரச்சனை தொடருமா?**
**விசாகன், ரொறன்ரோ**
கோயிலுக்குப் போன போது காதில் பட்ட சம்பாசணை இது.. குழந்தை தன் தாயைப் பார்த்துக் கேட்டது.. 'அம்மா.. ஐயரும் எங்கட சாதியே?'

**ஓய் முனிவரே.. சென்ற வாரம் குஷ்புவோடு நின்று ஒரு படம் போட்டீர். இந்த வாரம் குஷ்வு பிரபுவைக் கலியாணம் பண்ணிக் கொண்டார். முன்பு அமலாவோடு படம்... அமலா நாகார்ஜுனோடு... உமது ராசியோ?**
**ஜோ, மொன்றியல்**
குஷ்பு.. பிரபுவை கல்யாணம் பண்ணிய செய்தி கேட்டு 'பொருத்தம் உடலிலும் வேண்டும்.. புரிந்தவன் துணையாக வேண்டும்.. கணவனின் துணையோடு தானே மாமனை (சிவாஜியை) வென்றாக வேண்டும்' என்று பாடத் தோன்றியது.

## ஜெயந்தீஸனின் குட்டிக் கதைகள்

# கராட்டி



(12.03.1993 இதழில் பிரசுரமான "அடி" எனும் குட்டிக் கதையை தாயகம் வாசகர்கள் சிரமம் பாராமல் மீளவாசித்தால் "கராட்டி" இன்னமும் விளப்பமாகப்படும்)

சுரங்க ரயிலில் ஏறிய அந்தப் பெண் நன்றி கசியும் விழிகளால் ஏன் என்னைப் பார்க்கின்ருள் என்பது எனக்கு உடனடியாக விளங்கவில்லை. நாணத்துடன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டேன். இருந்தாலும் மனசு கேட்குமா? நன்றி கசியும் விழிகள் உண்மையிலேயே என்னைத்தான் பார்க்கின்றனவா என்பதைச் செக் பண்ண ரகஸியமாக விழிகளை உயர்த்தினேன். அப்பாடா! நன்றி கசியோ கசியென்று கசிந்தபடி மீண்டும் நான் நாணம் கொண்டு "நிலம்" நோக்கினேன்.

"உஷ்" என்று ஒரு மெல்லிய சத்தம். அது அவளேதான். பெண்கள் பின் அலையும் ஒருவன் நானல்ல என்பதை நிருபிக்குமாப்போல கீழே போட்ட தலையை மேலே எடுக்காமல் விட்டேன்.

"ஹேய்! உன்னைத்தானே!" என்றபடி என் முன் வந்து அமர்ந்த அவள் "பயப்படாதையும் ஜெயா, நான் உமக்குத் தீமை செய்யமாட்டன்" என்ருள்.

பிறகென்ன, எனது விழிகளிலிருந்து நன்றி காட்டாறு போல பெருக்கெடுத்தது.

"தம்பி, ஜெயா, நான் கியூபெக்கிலையிலிருந்து இங்கை வந்ததே உமக்கு நன்றி சொல்லீட்டுப் போகத்தான். தாயகம் காறரிட்டை உம்மடை விலாசம் கேட்டனுன். தரமாட்டம் என்று லெவல் அடிச்சிட்டாங்கள். இங்கை வந்து மூண்டு மாதம். ஆரிட்டை உம்மைப் பற்றிக் கேட்டாலும் அவங்களும் உம்மைப் பிடிக்கிறது கஷ்டம் எண்டிருங்கள். அண்டைக்கு ஒரு கூட்டத்திலை உம்மை ஒரு பெட்டை எனக்குக் காட்டித் தந்தாள். நான் கிட்ட வாறதுக்குள்ளை, நீர் காய்வெட்டுமாப் போல ஒடித் தப்பிட்டீர். நான் வந்தது இதுக்குத்தான் .....பிளாக் பெல்ட்டைக் கழட்டட்டோ?" என்றவுடன் துள்ளிக் குதித்தேன்.

கனடாவிலிருந்து பிளாக் பெல்ட்டுடன் என்னை ஒரு பெண் தேடிவரும் அளவிற்கு நான் அப்படியென்ன பெரிய தப்பு செய்தேன்?

"அக்கா, உங்களிட்டை நான் மன்னிப்புக் கேட்கிறன்" என்று என்னையுமறியாமல் சொன்னேன்.

"நான் உமக்கு நன்றி சொல்ல வர ஏன் இப்பிடிப் பயந்து நடுங்கிறீர் ஜெயா, பயப்படாதையும், உம்மையொண்டும் கனடாவுக்கு கட்டி இழுத்துக்கொண்டு போக நான் இங்கை வரல்லை. விஷயத்தை கேளும்...... நீர் எழுதின "அடி" என்ற குட்டிக்கதையை வாசிச்சனுன். கொடுமை செய்யிற என்ரை புருஷனுக்கு நல்ல பாடம்படிப்பிக்க நீர் கதையிலை சொல்லியதை நம்பி கராட்டி வகுப்பெடுத்து பிளாக் பெல்டும் எடுத்து அவரையும் குங் பூவாலை அடிச்சுத் துரத்தீட்டன். இப்ப எனக்கு நிம்மதி. எனது நிம்மதிக்குக் காரணமான உமக்கு நன்றி சொல்ல நான் இங்கை வந்தது தப்பா? எனது பிளாக் பெல்ட்டுக்கு ஒரு ஆசி சொல்லும்..." என்றபடி அக்கா தனது இடுப்பில் கட்டியிருந்த பிளாக் பெல்ட்டைக் கழட்ட வெளிக்கிட்டா....

"பிச்சை வேண்டாம், பிளாக் பெல்ட்டைப் பிடியுங்கோ" என்றபடி நான் ஒடித் தப்பி விட்டேன்.

வாழ்க கராட்டி,, வளர்க பெண்ணிலைவாதம், அழிக ஆணுதிக்கம்.

---

### இப்படியும் சேதிகள்...

கொல்லப்பட்ட மாணவனது காற்சட்டை பையுள் இருந்த குறிப்புக் கடதாசியின் எழுத்துக்கள் பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்தனவின் எழுத்துக்களே என சந்தேக பதிவேட்டு புலன் விசாரணையாளர் அறிவித்தார். குறிப்புக் கடதாசியில் காணப்பட்டவாறு மாணவர்கள் எவ்வித தாக்குதலுக்கும் திட்டமிடவில்லை எனவும் உறுதி செய்யப்பட்டது. விசாரணை தொடர்பான பூரண அறிக்கை ஜனுதிபதி ஜெயவர்தனவுக்கு அனுப்பப்பட்டது.

இரகசிய பொலீசாரின் அறிக்கையை வாசித்த ஜனுதிபதி ஜெயவர்தன பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேட் குணவர்த்தனவை தனது இல்லத்துக்கு வரவழைத்து அவ் அறிக்கையை வாசிக்கும்படி வழங்கினுர். சம்பவம் தொடர்பாக விளக்கம் அளிக்க ஏதாவது இருந்தால் அதனை பொலீஸ் அதிபர் உருத்திரா ராஜசிங்கத்திடம் சமர்ப்பிக்குமாறு ஜனுதிபதி ஜெயவர்தன எட்வேட் குணவர்தனவுக்கு அறிவித்தார். இறுதியாக எட்வேட் குணவர்தனவின் சேவை நீடிக்கப்படாமல் சிறில் ஹேரத் பொலீஸ் மா அதிபராக நியமனம் பெற்ருர்.

ஜெயவர்தன யுகத்தில் சேவை ஒய்வில் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிப் பொலீஸ் அதிபர் எட்வேர்ட் குணவர்தன, ரணசிங்க பிரேமதாச ஜனுதிபதியாக பதவியேற்றதும் பாதுகாப்பு ஆலோசகராகவும் லொத்தர் சபையின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

பின்னர் லொத்தர் சபையிலிருந்து விலகி லேக் ஹவுஸ் நிறுவனத்தில் 'டிரக்டர் ஒப் ஒபரேஷன்ஸ்' ஆக நியமனம் பெற்றுள்ளார். விரைவில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராகலாம் என்னும் ஆசையில் திரு எட்வேட் குணவர்தன உள்ளார்.

(தகவல் ராவய செப்டம்பர் 19,1993)

# “அரை குறை அடிமைகள்”



*ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்*

ஸ்ரீவனின் முகபாவத்தைப் பார்த்து விட்டு எதையும் திட்டவட்டமாக முடிவு கட்ட முடியவில்லை. சண்முகலிங்கத்தால். டொக்டர். "ஸ்ரிவண்வுட்" டின் முகத்தில் உணர்ச்சிகளின் வடிவங்களைக் கண்டுபிடிப்பது, அசாதாரணமான காரியம். இளமையும் அழகுமாய் உருண்டு திரண்டு கொண்டு திரியும் ஒண்டு இரண்டு நேர்ஸ்களைக் கண்டால் தவிர மற்றப்படியான நேரங்களில் ஸ்ரீவனின் முகத்தில் ஒரு "மரத்தன்மைதான்" தெரியும். கடந்த இரண்டு மூன்று கிழமைகளாக டொக்டர் சண்முகநாதனுக்கு வார விடுமுறை கிடைக்கவில்லை. ஹொஸ்பிட்டலில் உள்ள பல டொக்டர்கள் ஹொலிடேயில் போய்விட்ட படியால் விடுமுறைக்குப் போகாதவர்கள் வார விடுமுறைகளிலும் வேலை செய்ய வேண்டிக் கிடக்கிறது. டொக் சண்முகத்தின் தமக்கை குடும்பம் இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்கள். வந்திருக்கிறார்களா? சிங்கள அரசாங்கத்தால் அடித்துத் துரத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். தமக்கையின் குடும்பம் பெரிய குடும்பம். உயிரோடு எரியாமல் தப்பி வந்திருப்பவர்கள் தமக்மையும் கைக் குழந்மையும் தமக்கையின் வயது போன மாமி மட்டும்தான். அவர்களைப் பார்க்கப் போக வேண்டும் என்று திட்டம் என்று திட்டம் போட்டு வைத்திருந்தான்


**Antony Brothers Peoples Market**
**1472 Queen St West**
**Tel:516 3903**

**இவ்வார விசேட விலைகள்...**

பல்கன் பஸ்மதி அரிசி 6.99
4 றூத் மைசூர் பருப்பு 2.49
2 லீற்றர் கொக்கோ கோலா 1.59
சன்யோ T 20 வீடியோ கசட்டுக்கள் 2.99
உள்ளி .99

பால் 2 % 2.99
தயிர் 1.59
மரக்கறி எண்ணெய் 2.99
பத்து றூத் வெங்காயம் 1.99
கோழிக்கால் றூத் 79 சதங்கள்
10 கிலோ பார்பொயில் அரிசி 5.99

**எம்மிடம் சகலவிதமான மரக்கறிகளும் மலிவு விலையில்**

சண்முகலிங்கம். லீவு கிடைத்தால் இந்தக் கிழமை சரிவரும் போலிருந்தது தமக்கை குடும்பத்தைப் பார்க்கப் போவது. ஆனுல் லீவு கடைக்குமா? "ஸ்ரீவன் வூட்டின்" டியுட்டியை சண்முக லிங்கம் எத்தனேயோ தரம் "கவர்" பண்ணியிருக்கிருர். டொக்டர் சண்முகலிங்கம். இந்த வார விடுமுறையில் சண்முகலிங்கத்துக்கு டியூட்டி போடப்பட்டிருந்தது. நான் ஒரு அவசர காரியமாக இந்த வார விடுமுறையில லண்டனே விட்டுப் போக வேண்டும் என்று சொன்னுன் டொக்டர் சண்முகலிங்கம். என்ன அவசரம் என்ன காரியம் என்று டொக்டர் ஸ்ரிவனுக்கு சொல்லும் மனநிலேயிலில்லே டொக்டர் சண்முகலிங்கம். எத்தனே கொடுமைகளேச் சொல்வது?

கொழும்பிலுள்ள அவன் உற்ருர் உறவினர்கள் உடமைகள் எல்லாம் இழந்தும் தெருக்களிலும் சந்திகளிலும் இழுத்து வரப்பட்டு சிங்களக் காடையர்களால் உயிரோடு எரிக்கப்பட்டதை அவன் எப்படிச் சொல்வான்? சொன்னுன் முடிந்தவற்றை.

தமக்கைக்கும் குடும்பத்துக்கும் என்ன நடந்திருக்கும் என்று அவன் கடந்த ஒரு மாதமாய்ப் பட்ட வேதனே அவனுக்குத்தான் தெரியும். "இலங்கைத் தீவில் தமிழர்கள் உடமைகள் நாசமாக்கப்பட்டு அகதிகளாகிருர்கள். உல்லாசப் பிரயாணிகளாய் கொழும்பில் தங்கியிருக்கும் வெள்ளேக்காரர் தமிழர்கள் தெருக்களில் உயிரோடு கொழுத்தப்பட்டதை கண்டு திடுக்கிடுகிருர்கள். அரசாங்கத்தைச் சேர்ந்த மந்திரிகளும் (சிங்கள) முக்கியத்தர்களும் தமிழர்களேத் தாக்குவதில் தலேமை தாங்குவதாகச் செய்திகளடிபடுகின்றன" என்றெல்லாம் கேள்விப்பட்டபோது சொல்ல முடியாத துயருக்குள்ளானுன் சண்முகலிங்கம்.

கொழும்பில் மட்டும் ஐம்பதினுயிரம் தமிழ் மக்கள் அகதிகளாய் தவிக்கிருர்கள் என்று டெலிவிஷனில் காட்டினுர்கள். சோகம் ததும்பிய ஆயிரம் முகங்களில் பட்டினியோடு தஞ்சடைந்த பல்லாயிரக்கணக்கான உருவங்களில் தன் தமக்கையின் உருவமும் தென்படுமா என்று துடித்தான் சண்முகலிங்கம். எத்தனேயோ நாட்கள் முயற்சி செய்து அலுத்த பின் கொழும்பில் உள்ள ஒரு சிங்கள நண்பரின் முயற்சியால் தமக்கை ஒரு அகதி முகாமிலிருப்பதாக அறிந்து அதிர்ந்தான் சண்முகலிங்கம். தமக்கையின் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு என்ன நடந்ததாம், சண்முகலிங்கம் துடிப்புடன் டெலிபோனில் பேசியதன் சிங்கள நண்பனேக் கேட்டான்.

தனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டான். சிங்கள நண்பன் தெரிந்தாலும் சொல்லத் தயாரில்லே என்பது அவன் குரலில் தொனித்தது. அதன் பின் எத்தனேயோ கஷ்டப்பட்டு டிக்கட் அனுப்பித் தமக்கையைக் கூப்பிட்டிருக்கிருன்.

டொக்டர் சண்முகலிங்கம் கல்யாணமாகாத டொக்டர். "பச்சிலர்ஸ் குவாட்டர்ஸில் இருக்கிருன். தமக்கை குடும்பம் தங்கி நிற்க வசதியில்லே. தமக்கையின் மைத்துனர் வீட்டுக்கு அனுப்பி விட்டான். எப்படியும் இந்த வார விடுமுறைக்கு லீவு எடுக்க வேண்டும் என்று முடிவு கட்டியிருந்தான். ஸ்ரிவனின் உதவியைக் கேட்டான்.

எத்தனேயோ மழுப்பல்களுக்குப் பின் ஒம் என்று சொன்னுன் ஸ்ரீவன். அப்படிச் சொன்னவன் இப்போது வந்து வேறு ஏதோ சொல்வதைக் கேட்க சண்முகலிங்கத்துக்கு நம்ப முடியாமலிருக்கிறது ஸ்ரீவன் சொல்லும் கதை.

வார்டில் பின்னேரம் அட்மிட் பண்ணுப்பட்ட நோயாளி எந்த வெள்ளேக்கார டொக்டரும் தன்னேயோ தன் உடைந்த எலும்பையோ தொடக்கூடாது என்று சொல்லி வீட்டானும்!

அப்படிச் சொல்லிய நோயாளியின் தைரியத்தைப் பாராட்டும் மனநிலேயிலில்லே சண்முகலிங்கம். வெள்ளேக்கார டொக்டர்களேவிட்டால் டொக்டர் சண்முகலிங்கம் பார்த்தே தீரவேண்டும். அவனேவிட்டால் வேறுயாருமில்லே அந்த நோயாளியைப் பார்க்க. ஹீக்ரோ விமான நிலேயத்திலிருந்து லண்டனுக்கு வரும் வழியில் ஏற்பட்ட கார் விபத்தில் கால் எலும்பை உடைத்துக் கொண்டு நிற்கிருனும் (எப்படி நிற்பது? படுத்திருப்பான்.) புது நோயாளி. சிக்கலான எலும்புடையலாம். நிறைய இரத்தம் சேதமாகிவிட்டது என்று சந்தேகிக்கிருர்களாம். ஸ்ரிவன் தனது வெளிறிய முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சொல்கிருன் சண்முகலிங்கத்துக்குக் கோபம் பற்றிக் கொண்டு வருகிறது. தன் குடும்பம் உடைபட்டு சிக்கலாகி, சின்னு பின்னப்பட்டு சிதறிப்போய் தாங்கள் பிறந்த தாய் நாட்டிலேயே அநியாயமாய் குற்றுயிரும் குலேயுயிருமாய் ஒரு உரிமையுமின்றி உதவியுன்றித் தவிக்கிருர்கள். யாரிந்தப் புது நோயாளி தன் காலேத் தன் பிழையால் உடைத்துக் கொண்டு (பிழையான முறையில் கார் ஓட்டியபடியால் விபத்து நடந்ததாம். ஸ்ரீவன் தந்த தகவலிது) அந்நிய நாட்டு ஆஸ்பத்திரியில் கிடந்து கொண்டு தான் விரும்பிய டொக்டரைத் தான் பார்க்க உரிமையுண்டு என்று சட்டம் கதைப்பதற்கு?

சண்முகலிங்கம் எரிச்சலுடன் ஸ்ரீவனேப் பார்க்கிருன், "என்ன அப்படியான அவசரமான காரியம்" ஸ்ரிவன் சண்முக லிங்கத்தைப் கேட்கிருன். ஸ்ரிவன் அதிகம் கதைக்காதவன். மற்றவர்களின் தனிப்பட்ட விஷயங்களில் அக்கறை காட்டாதவன். ஆனுலும் சண்முகலிங்கத்தின் முகத்தில் வெடிக்கும் கோபத்துக்குக் காரணம் தெரியாமல் கேட்கிருன்.

ஸ்ரிவனுக்குப் பதில் சொல்லவில்லே. சண்முகலிங்கம் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பின்னே ஆறு மணி ரெயின் எடுத்து ஹாட்வோர்ட் (தமக்கையிருக்கும் ஊர்) போவதாக இருந்தான். இப்போதோ நேரம் ஐந்தரையாகிறது. இவன் நேரத்தைப் பார்ப்பதைப் பார்த்து விட்டு

"ஏதும் படம் பார்க்கப் போகிருயா" என்று கேட்டான் ஸ்ரிவன். படமா? இலங்கையில் பிறந்த குற்றத்திற்காக தமிழரின் வாழ்க்கையே பயங்கரப் படமாயிருக்கிறது இதைவிட வேறென்ன படம் திரையில் பார்க்க வேண்டும்? சண்முகலிங்கம் ஸ்ரிவனுக்கு மறுமொழி சொல்லவில்லே. "காதல் படமா" ஸ்ரிவன் கேட்டான். சண்முகலிங்கம் மறுமொழி சொல்லாததைக் கேட்டு.

"இந்தியப் படமா" ஸ்ரிவனுக்கு என்ன

இன்றைக்கெல்லாம் கேள்விப் படலம் விரிகிறது? சண்முகலிங்கம் எரிச்சலுடன் தலையாட்டினான். எதையாவது சொல்லி ஸ்ரிவனை சமாதானம் செய்து விட்டு போக வேண்டும் போலிருந்தது?

"எதைப் பற்றிய படம்" ஸ்ரிவனின் முகத்தில் கிளு கிளுப்பு, ஸ்ரிவன் எப்போதோ ஒரு நாள் காம சூத்திரா படம் பார்த்ததாகச் சொன்னான். ஸ்ரிவனின் குறும்பு தவழும் முகத்தைப் பார்த்ததும் சண்முகலிங்கத்துக்கு இன்னும் கோபம் கூட வருகிறது. எழிய நாய்கள்! இந்தியர் (சண்முகலிங்கம் இலங்கையன் ஆனால் ஹொஸ்பிட்டலில் எல்லோரும் The Indian Doctor என்றுதான் அவனைக் குறிப்பிடுவார்கள்) காம சூத்திராவும் கறிச் சட்டியையுமா நினைத்துக் கொள்கிறார்கள்?

"என்ன படமா? காளியைப் பற்றியது. இந்தப் பெண் தெய்வம் காளியைப் பற்றியைத் தெரியும்தானே" சண்முகலிங்கம் வெடித்தான்.

ஸ்ரிவனின் முகத்தில் சட்டென்று ஒரு இருள் படிந்த பாவம். மனக் கண்ணில் தலையைக் கொய்து நிற்கும் பத்திர காளியைக் கண்டிருப்பான். கையிலிருக்கும் ஸ்டெஸ்கோப்பை ஸ்ரீவனின் கழுத்தில் போட்டு அழுத்திக் கொலை செய்ய வேண்டும் போல கோபம் வருகிறது சண்முகலிங்கத்துக்கு.

இவனைக் கோபித்து என்ன பிரயோசனம். தன்னை எதிர்பார்க்கும் புது நோயாளியைத்தான் கோபிக்கவேண்டும், இந்திய டொக்டரைத்தான் பார்ப்பேன் என்று சொல்லும் அந்தப் புது நோயாளியின் நெஞ்சழுத்தம்தான் என்ன?

அந்நிய நாட்டில் இந்தப் புது நோயாளிகளிக்கிருக்கும் துணிவும் நெஞ்சழுத்தமும் பிறந்த நாட்டில் வாழ்ந்து இன்று அகதிகளாய் மாறியிருக்கும் தமிழர்களுக்கிருந்தால். ..... பெருமூச்சு விடுகிறான் சண்முகலிங்கம்.

அவன் கால்கள் வார்ட்டுக்கு போகும் பாதையில் போகின்றன. மனமோ நெஞ்சழுத்தமும் தைரியமும் கொண்ட நண்பன் ராமநாதனில் தாவுகிறது.

ராமநாதன் வெறி பிடித்த சிங்கள அரசாங்கத்தின் கைதியாகி விட்டான். என்ற செய்தி சண்முகலிங்கத்திற்கு எட்டிய போது சண்முகலிங்கத்துக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

நீதிக்கு தலைவணங்கி நேர்மையே லட்சியம் என வாழ்ந்த ராமநாதன் சிங்கள அரசாங்கத்துக்கெதிராக என்ன செய்தான்? ராமநாதன் ஒரு சாதாரண அரசாங்க ஊழியன் உணவுக்கு உழைக்கும் நேரம் போக மீதமுள்ள நேரத்தில் இலக்கியமே உலகம் என்று மூழ்கிக் கிடப்பான். எப்போதாவது இருந்து கவிதை எழுதுவான். ஒரு சில கவிதைகள் பத்திரிகைளிலும் பிரசுரமாகியிருக்கின்றன. இனிமை யாகப் பேசுவான். அவனைச் சுற்றி ஒரு இளவட்டக் கூட்டம் சிலவேளைகளில் காணப்படும்.

வைத்தியக் கல்லூரியில் படிக்கும் போது விடுமுறை காலங்களில் சண்முகலிங்கமும் ராமநாதனைச் சுற்றித்திரிந்த ஒன்றிரண்டு பேரில் ஒருத்தனாகவிருந்தான்.

நிலவையும் தென்றலையும் பற்றிக் கவிதை எழுதத் தொடங்கிய ராமநாதன் அடிமைத் தனத்தையும் விடுதலையையும் பற்றி எழுதினான். யாழ்ப்பாணத்தில் திரும்பிய பக்கமெல்லாம் துப்பாக்கி பிடித்த சிங்கள ராணுவத்தினர்.

அடக்கு முறையும் தாக்குதலும் நாளாந்த சம்பவங்கள். அதன் பிரதிபலிப்பு ராமநாதனின் கவிதைகளில் தெரிந்தது. சண்முகலிங்கம் வைத்தியப் படிப்பு முடிய சிங்கள பகுதிகளில் வேலை செய்யப் பயந்து மேற்படிப்பை முன்னிட்டு லண்டனுக்கு வந்து விட்டான். சிங்களப் பகுதிகளில் 77ம் ஆண்டு நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆளாகிய தமிழர்களின் அனுபவங்கள் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. ராமநாதனின் தகப்பன் ரத்தினபுரியில் அப்போது ஆசிரியராக இருந்தார். ராமநாதனின் குடும்பம் ரத்தினபுரியிலிருந்தது. கலவரம் தொடங்கியதன் பிரதிபலிப்பு ரத்தினபுரி எங்கும் தெரிந்தது.

சிங்களக் காடையர்கள் பயங்கர ஆயுதங்களுடன் தமிழர்களின் வீட்டைத் தேடி ஆவேசத்துடன் திரிந்தார்கள். தேடியலைகிறார்கள், இந்தியத் தமிழர்களைத் தேடவில்லையே என்று ஆறுதலுடன் ராமநாதன் குடும்பம் பக்கத்திலுள்ள தோட்ட பகுதிக்குத் தஞ்சம் புகுந்தார்கள்.

ஆனால் அங்கு கண்ட பயங்கரக் காட்சி. ..சண்முகலிங்கம் லண்டனுக்கு வர முதல் ராமநாதன் இலங்கையில் தமிழரின் நிலைப்பற்றி கதைத்தான். தான் அனுபவித்த கண்ணால் கண்ட கோரக் காட்சிகளை விபரித்த போது பிணங்களையும் இரத்தத்தையும் தொட்டு அளையும் சண்முகலிங்கத்தின் உடம்பே பயத்தால் சிலிர்த்தது.


இலங்கையின் பொருளா தாரத்திற்கு முதுகெலும்பானவர்கள் இந்திய வம்சா வழியினரான தமிழ்த் தோட்டத் தொழிலாளிகள். ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலையோ அகில உலகமும் அறிந்த கீழ்த்தரமான நிலையானது. கடந்த நூற்றி ஐம்பது வருடங்களாக இலங்கை அரசாங்கத்தால் அரை குறையடிமைகளாக நடத்தப் படுபவர்கள் அவர்கள்.

அவர்களுக்கு எந்த விதமான உரிமையுமில்லை. அடிப்படை மனித உரிமைகள் கூட சிங்கள அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. அவர்களின் உடம்பைத் தவிர இலங்கைப் பொருளா தாதாரத்திற்கு அத்தியாவசியமான முதுகெலும்புகள் சிங்களக் காடையர்களால் உடைக்கப்பட்டன. தொழிலாளர்களின் மனைவிகள் மக்கள் மானபங்கப் படுத்தபட்டார்கள். உலகத்தில் இதுவரை எந்த நாட்டிலும் நடக்காத கோரமான கேவலமான விதத்தில் இந்திய வம்சாவழித் தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள் எட்டு வயது இளம் இந்தியச் செல்விகளின் பெண்மை மிருக வெறி பிடித்த சிங்களக் காடையர்களால் துவம்சம் செய்யப்பட்டழிந்த கொடுமையை ராமநாதன் நேரில் கண்டான்.

இரத்தினபுரியில் வீடு வாசலிழந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தபோது தான் ராமநாதனுக்கு சண்முகலிங்கத்தின் சினேகிதம் கிடைத்தது. மெடிகல் கொலிஜ் விடுமுறைகளுக்குப் போயிருந்தபோது சண்முகத்தின் சினேகிதன் ஒருத்தனின் சினேகிதத்தின் மூலம் ராமநாதன் பழக்கமானான்.

*அடுத்த வாரம் முடியும்...*

# முதலாளித்துவ கலாசாரப் பரப்பில் தத்துவ உற்பத்தியும் சமூக உறவும்



கௌந்தி

புதிய கலாசாரத்தினது ஜனனத்திலிருந்துதான் "இருத்தலற்ற இருத்தல்" மீதான துணிச்சலான சிந்தனைகள் உதிக்கும். அமெரிக்காவின் ஆதிக்குடிகளான செவ்விந்தியர்களை ஈவிரக்கமின்றிப் பூண்டோடு அழித்த முதலாளித்துவ ஆதிக்கவெறியின் லாபங்களில் குளிர்காய்ந்து ...எமக்கு வழங்கப்படும் அனைத்துவிதமான தத்துவ போதனைகளையும் நாம் நியாயமாகச் சந்திக்கலாம் (19 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்திய தத்துவ போதனைகளே இங்கு கருத்திலெடுக்கப்படுகின்றன). அனைத்தையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கவேண்டுமென கார்ல் மார்க்ஸ் எழுதியுள்ளார்.

★ ★ ★

முதலாளித்துவ கலாசாரத்தின் உலகம் தழுவிய வியாபகம் அனைத்து மனிதர்களையும் பொருள்சார் சிந்தனைக்குள் தங்கியுள்ளது. "உடல்களை முதலில் காப்போம்" என பிரெஞ்சு தத்துவஞானியான ஜோன் போல் சார்த்திர், பிரான்ஸிலே 68 இல் நடைபெற்ற மாணவர் கிளர்ச்சியில் நேரடியாகக் கலந்து கொண்டபோது சொன்னார். உடல் என்பது வெறுமனே அசையும் பிண்டமல்ல. இது கண்ணீர் விடுகின்றதே, இரங்குகின்றதே, தியாகம் செய்கின்றதே இவைகள் அனைத்தும் பொய்யா? பௌதிகக் கோட்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே மனித இருத்தலின் இயக்கத்தை விளங்கிக் கொள்ள முடியாது. மனித மனவலயத்தை ஆக்கிரமிக்கும் பல்லாயிரக்கணக்கான கேள்விகளுடன் சம்பந்தப்பட்டது தான் இருத்தல் பற்றிய விசாரணை. கேள்விகளுக்கான பதில்களைக் கொடுக்கும் திராணியற்ற நிலையிலேயே சமகாலத் தத்துவ உற்பத்திகள் உள்ளன.

★ ★ ★

முதலாளித்துவ நாடுகளின் கல்விசார் புள்ளிவிபரங்கள் சில தத்துவத்துறையில் மாணக்கர்க்கு ஏற்பட்டுவரும் "ஈர்ப்பைக்" காட்டுகின்றன. உண்மையின் ஒளியைக் காணவேண்டுமென்கின்ற வேட்கை இவர்களிடம் பெருக்கெடுக்கின்றது

## இருத்தலியல் விசாரணைகள்

என்ற அர்த்தத்தைக் கொடுக்கலாமா? இந்தத் தத்துவ வேட்கைக்கும் அதற்கு அருகேயுமுள்ள நவகாலனித்துவ அரசியல் வெறிக்கும் முடிச்சுப் போடலாமா? அதிகாரத்துவத்தை மையமாகக் கொண்ட முதலாளித்துவ அரசியல் கோட்பாடுகளும், இதனது செயற்கையான பொருளாதாரக் கட்டமைப்புகளுமே உலகம் தழுவிய மனித இருத்தலிற்கு அச்சுறுத்தல தருவனவாக உள்ளன. முதலாளித்துவ கலாசாரமே உலக இன்னலிகளிற்கான அடிப்படைக் காரணம் என வரும்போது இந்த சமூகத்துள் இருந்து உற்பத்தி செய்யப்படும் இருத்தல் தொடர்பான கருத்து மூலங்கள், எவ்வளவுதான் அற்புதமானவையாக இருப்பினும், இக்கலாசாரத்தை நொருக்கித் தள்ளி புதிய கலாசாரத்துக்கான கதவைத் திறந்து விடுமா என்பதை நாம் அவதானமாக ஆய்வுக்கு எடுக்க வேண்டும்.

முதலாளித்துவ கலாசாரம் போலியானது என்பதே எனது தீர்க்கமான அபிப்பிராயம். இதனது கண்டுபிடிப்புகள் இல்லையேல் உலகம் பின்தங்கிய நிலையிலே இருந்திருக்கும் என்ற கருத்தினை இலகுவிலே ஏற்றுக் கொள்ளமுடியாது. கண்டுபிடிப்புகள் உலகப் பந்தின் சமச்சீரை அரசியல், பொருளாதார, சூழலியல் ரீதியாக நிலைய குலைய வைத்தமையை ஆவணபூர்வமாக நிருபித்துவிடலாம். முதலாளித்துவ சமூகத்தினுள்ளே மனித உறவுகள் யந்திரமயமாக்கப்பட்டுள்ளன. மனிதன் தமது அடையாளத்தை மறந்து போகுமளவிற்கு அவன் மீது சுமைகள் சுமத்தப்பட்டுள்ளது. மனிதனின் இயற்கைத்துவம் செயற்கைத்துவமாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரச் சுமையையும், போலிச் சுகந்தங்களையுமே சுவாசிக்கப் பழகிவிட்ட முதலாளித்துவ கலாசாரத்தினது தனிமனித உவாதைகள், இங்கிருந்து எழும் தத்துவ உற்பத்திகளில் தெளிவாகச் சொல்லப்பட்டதுண்டா?

எனது நண்பரான ஐரோப்பிய பேராசிரியரும், மானிடவியல் அறிஞருமான ஒருவர் "மனிதன் சுண்டெலியிலும் பார்க்கச் சிறுத்துக் கொண்டு போகின்றான்" எனக் குறிப்பிட்டார். முதலாளித்துவ கலாசாரத்துள் சிக்குப்பட்டுள்ள மனிதர்கள் அனைவரும் இதனது அரசியல் அமைப்பு முறைகள் அனைத்தையும் ஆதரிக்கின்றனர் என்பதல்ல எனது வாதம். இந்த அரசியல் அமைப்பு முறையின் கைதிகளாக இவர்கள் என்றும் இருப்பதற்காக தேசியவாதங்களும், மதவாதங்களும் இங்கே புதுப்பிக்கப்படுகின்றன. இது உலகம் தழுவிய மனித இருத்தல் பற்றிய விழிப்பிலிருந்து இவர்களை அந்நியமாக்கவே பயன்படுகின்றது. நாம் மனிதர்களா அல்லது இயந்திரங்களா என்ற கேள்வியைக் கேட்கவும் திராணியற்ற இந்தச் சுண்டெலிகளுக்கான நுகர்விற்காக வழங்கப்படும் தத்துவ உற்பத்திகளிலே ஓர் வரட்சியை அவதானிக்க முடிகின்றது. வரட்சி என இங்கே குறிப்பிடுவது உற்பத்தி விகிதத்தின் வீழ்ச்சியை அல்ல, அதிகரிப்பை, இதனையே "உபரித்துவ தத்துவ உற்பத்தி" என்ற பதத்தினூடாக வெளிப்படுத்துகின்றேன். எனது மதிப்பீட்டை ஐரோப்பிய புத்திஜீவிகள் மத்தியிலே வைத்தபோது, உபரித்துவ தத்துவ உற்பத்தியென்பது முதலாளித்துவ கலாசாரத்தின் வியாதியாகவே வந்து விட்டது என்பதை ஒத்துக் கொண்ட இவர்கள், முதலாளித்துவ கல்விமுறையின் எல்லை கடந்த தேடலின் விளைவாக, எதைத் தேடுகின்றோம் என்பதை தெரியாமலே

தேடுகின்ற ஒரு விநோதமான போக்கு வேகமாக வளர்ந்து வருகின்ற தென்பதையும் இதனைக் கட்டுப்படுத்தல் இலகுவான தல்லவென்றும் சொல்லினர்.

ஐரோப்பிய தத்துவஞானியான பேராசிரியர் லுட்விக் விற் ஜென்ஸ்ரை தனது வாழ்வில் எதனையுமே, தன் கைப்பட எழுதாது விட்டார். இன்றோ தத்துவ ஞானிகள் அனைவரும் எழுத்தாளர்களாகவேயுள்ளனர். மனித இருத்தலின் அடிப்படைகளை விளங்க வைக்க நாம் தொன் கணக்கில் எழுதிக் குவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஹெராக்கிளிற்றோ, பிளாட்டனோ, அல்லது அரிஸ்ரோட்டிலோ தொன் கணக்கில் எழுதிக் குவித்தோர் அல்லர். இவர்களது சித்தாத்தங்களிலே காணப்படும் தெளிவினை சமகால ஐரோப்பிய தத்துவ உற்பத்திகளினூடு காணமுடியாதுள்ளது. மூவரை இங்கு உதாரணத்துக்கு எடுக்கின்றேன்:

பிராங்பேட் சிந்தனைப் பள்ளியின் ``கடைக்குட்டி'' யான ஜூர்ஹன் ஹபர்மாஸ் ஜேர்மனியில் இப்போது உயிருடன் வாழ்பவர். "தொடர்புத்துவ ரீதியாக இயங்குதல்'' எனும் கண்டுபிடிப்பைச் செய்த இவர் மார்க்ஸின் "வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை" புனருத்தாரணம் செய்யும் திருப்பணியிலும் ஈடுபட்டுள்ளார். ஹாபர்மாஸின் எழுத்துகள் பேராசிரியர்களுக்கே விளங்குவதில்லை. ஆனால் இவரது படைப்புகளை விழுந்து விழுந்து வாங்கிச் சேகரிக்கும் ஒரு வியாதி தற்போது ஐரோப்பிய மாணக்கர் மத்தியிலே வளர்ந்து வருகின்றது. "ஜூர்ஹன் ஹாபர்மாஸ் உண்மையிலேயே ஒரு திறமைசாலி, இவரிடம் நல்ல கருத்துகள் உள்ளன, ஆனால் இவரின் எழுத்தினூடு இவர் என்ன சொல்ல வருகின்றார் என்பது எனக்கே புரியாமலுள்ளது'' என ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளில் பண்டிதப் பட்டம் (கலாநிதி) பெற்ற பேராசிரியர் ஒருவர் என்னிடம் நேரடியாகவே சொன்னார். தமது உற்பத்திகளைப் பொதுநுகர்விற்கு எளிதாக்குவதில் புத்திஜீவிகளில் அநேகமானோர் தோற்றுப் போய்விடுகின்றனர். ஹாபர்மாஸ் இதற்கொரு சாட்சியம்.

எல்லோருமே தத்துவஞானிகளாகி போதனை செய்தல் வேண்டும் என நினைக்கும்போது, பொது நுகர்வு மறபட்டு போட்டியுணர்வு தலை நீட்டும். புதியன கண்டுபிடித்தலே உண்மை என இருப்பதால், தத்துவஞானிகளாகத் தம்மைத் தொலைகாட்சி சாதனங்களில் காட்டி மகிழ விரும்புவோர், தம்மீது சமூகத்திடம் இருந்து ஓர் பிரமிப்பை எதிர்பார்க்கும் நோக்கில் "விநோதமான" மொழித் தேர்வுகளுக்கு அடிமையாகி விடுகின்றனர். மார்க்ஸின் விநோதமான மொழித் தேர்வு பற்றி அதனை ஆதரிக்கும் விதத்தில் நியூயோர்க் பலகலைக்கழகப் பேராசிரியர் பேர்த்தல் ஒல்மான் தனது "அந்நியமாதல்'' புத்தகத்தில் எழுதியுள்ளார். இந்த விநோதமான மொழித் தேர்வு ஐரோப்பிய பலகலைக்கழகச் சுண்டெலிகளை மட்டுமல்ல, மூன்றும் உலக பல்கலைக்கழகச் சுண்டெலிகளையும் சுண்டியிருப்பதை நேரடியாகவே கண்டுள்ளேன். முதலாளித்துவ கலாசாரத்துள் புடம் போடப்படும் மூன்றும் உலகப் புத்திஜீவிகளில் அநேகமானோர் இக்கலாசாரத்தின் தூதுவர்களாகவே மாறிப் போதல், இருத்தல் பற்றிய அச்சுறுத்தலின் இன்னொரு பரிமாணமாக உள்ளது.

பிரான்ஸினது மிகப் பெரும் கல்வி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவும், எமது "இடது சாதி''களின் சுப்பர் ஸ்டாராக அவ்வப்போது இருப்பவரும், தனது மனைவியைத் தூக்கிலிட்டுக் கொன்றவரும் இறுதிக் காலங்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே கழித்தவருமான லூயிஸ் அல்த்தூஸரை எடுப்போம். ஒரு காலத்தில் தீவிர ஸ்டாலினிஸ்டாக இருந்த அல்த்தூஸர், இனவாதம், நிறவாதம் இவைகளைத் தனது லாபத்துக்காகப் பாவிக்கத் தயக்கம் காட்டாத பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸப் போக்கை விமர்சித்து, அதுவும் ஒரு காங்கிரஸில் (ஹென்றி லூபெவரையும் இதற்குள் அடக்கலாம். இவரும் தான் 48 இல் ஸ்டாலினை ஆதரித்தது தவறு என சாகமுன்னர் பாவமன்னிப்புக் கேட்ட கருத்தரங்கு ஒன்றில் நானும் சமூகமளித்திருந்தேன்) அறிக்கையாக வைத்துவிட்டு விலகியதைப் பாராட்டலாம். ஆனால் இவர் "மார்க்ஸை விளங்கிக் கொள்வதற்கு ....." POUR COMPRENDRE MARX எனும் புத்தகம் எழுதியுள்ளார். இந்தப் புத்தகத்தை வாசிக்க உயிரோடு இல்லாது போனதால் மார்க்ஸ் கொடுத்து வைத்தவர். அல்த்தூஸரது மொழித்தேர்வின் குழறுபடியைத் துணிச்சலோடு முன்வைத்த பெருமை கீதாவுடன் சேர்ந்து எழுதும் எஸ்.வி. ராஜதுரைக்கு உண்டு. அல்தூஸர் பல வரிகளில் சுணப்பியதை, இவர் தனது "அல்தூஸர் ஓர் அறிமுகம்'' என்ற படைப்பிலே ஒரு வரியில் சொல்லிக் காட்டியுள்ளார்.

சில பக்கங்களில் சொல்லி விடக்கூடியவைகளை பல பக்கங்களில் சொல்லுவதைக் கலையாகவே வரித்துக் கொண்டவர் ஜோன் போல் சார்த்திர். உலக மொழிகள் பலவற்றிலும் இவரது "இருத்தலியல்'' சித்தாந்தம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சார்த்திர் துணிச்சலானவர், நேர்மையானவர். மனித இருத்தல் மீதான விசாரணைகளுக்கு இவரதும், ஆல்பேர் காமுயுவினது எழுத்துக்களும் உண்மையிலேயே அடிப்படையானவை, சார்த்தரின் இலக்கிய இயக்கத்துள் நடத்தப்படும் இருத்தல் மீதான விசாரணைகளில் உள்ள மொழித் தேர்வு அல்தூஸர், ஹாபர்மாஸ் போன்றோரைப் போல மோசமானதல்ல, இவருடைய தனிப்பட்ட இருத்தலுக்கு எழுத்து ஒரு BESOIN (தேவை) ஆக இருந்ததால், நான்கு வரிகளில் சொல்ல வேண்டியதை 40 வரிகளில் சொல்லியுள்ளார்.

அடுத்த வாரம் "இருத்தலும் இலக்கிய இயக்கமும்'' என்ற மகுடத்தின் கீழ் மொழித்தேர்வு, சமூக உறவு பற்றி விரிவாகப் பார்ப்போம்.....

**தத்துவஞானிகளாகத் தம்மைத் தொலைகாட்சி சாதனங்களில் காட்டி மகிழ விரும்புவோர், தம்மீது சமூகத்திடம் இருந்து ஓர் பிரமிப்பை எதிர்பார்க்கும் நோக்கில் "விநோதமான" மொழித் தேர்வுகளுக்கு அடிமையாகி விடுகின்றனர்.**

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |


உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil




# GOOD BYE BALDNESS



**முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி**

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**
**TRY FIRST**


**பலர் இச்சிகிச்சை மூலம்**
**பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

# முகம் தொலைத்த முகங்கள்.

இறக்கைகள் வெட்டப்பட்டு
கூண்டுக்குள் அடைக்கப்பட்டேன்
ஒரு கிளி
புகலிடத்தில் புகையில்லாத
சமையலறையில்
வெந்து கொண்டிருக்கின்றேன்
ஒரு தாய்
குளிரும் வெயிலும் காவலாளிகளாக
நான் வீட்டுக்குள் கைதியானேன்
ஒரு பாட்டி
நீரிலும் நிலத்திலும் வாழும்
தவளை போல் இரவிலும் பகலிலும்
இரண்டு வேலைசெய்கின்றேன்
ஒரு குடிமகன்
தேன் தமிழினை தொலைத்து படிப்பிற்காக
போர்வைகளை சுற்றிக்கொண்டு பள்ளிக்கு
செல்கின்றேன்
ஒரு மாணவி
பிறந்தபோதே புட்டிப்பால் குடிக்க
கற்றுக் கொண்டேன்
ஒரு குழந்தை
பாஷைகள் மாறுவது போல் என்
மதத்தையும் மாற்றிக்கொண்டேன்
ஒரு நண்பன்
ஒரு திருமணத்திற்கு செல்ல பட்டாலும்
கழுத்து நிறைய தங்கத்தாலும்
என்னை அலங்கரித்துக் கொண்டேன்
ஒரு பெண்
தங்கைக்கு சீதனம் சேர்ப்பதிலே
இயந்திரமாய் மாறி என் வாழ்வை
இழந்தேன்
ஒரு அண்ணன்
மலர்வளையங்கள் வைத்தே
கல்லறைகளை மறைத்து விட்டேன்
ஒரு தேசபக்தன்
அழிவுகளையும் மரணங்களையும்
கையொப்பத்தால் நிறுத்திவிட முடியும் என
கனவு காணும்
சமாதான விரும்பி

**ஜி.மொனிக்கா**



# இனியவளே!

வெண்பனியை நம்பாதே!
நீலமேகமதை நம்பாதே
தங்கவிண்மீன்களை நம்பாதே
சுட்டெரிக்கும் சூரியனை நம்பாதே
நிலமகளை நம்பாதே
பாய்ந்து வரும் அலைகளை நம்பாதே
முத்தமிடும் தென்றலை நம்பாதே
பின்னால் வரும் நிழலை நம்பாதே
கவர்ச்சி காட்டும் பெண்ணை நம்பாதே
ஆழமான சேற்றில் மலர்ந்து கிடக்கும்
தாமரையை நம்பாதே.....
பூத்துகிடக்கும் மலர்களை நம்பாதே
மகரந்தத்தை காவிச்செல்லும்
வண்டினை நம்பாதே
அமைதியான கடலை நம்பாதே
போரை நம்பாதே
ஆயுதங்களை நம்பாதே
இருட்டை நம்பாதே
நடித்திடும் வஞ்சியரை நம்பாதே
கணவனை குறைசொல்பவளை நம்பாதே
கண்சிமிட்டும் காளையரை நம்பாதே
சீதனம் கேட்கும் பெரியாரை நம்பாதே
கேலிசெய்யும் நண்பனை நம்பாதே
பணத்தாசை பிடித்தோரை நம்பாதே
கூடிமகிழ்ந்து விட்டு குறைசொல்லி
திரிபவனை நம்பாதே
உன்னை நம்பு உன்னை நம்புபவரை நம்பு!

**நிவேதிகா**

# இதுதான் காலம்!

கட்டுப்படுகின்றேன்
என்பதை
மட்டும் வைத்தே சூதாடினோம்
நானும்
அவளும்

வாய்க்கொழுப்பு
அதிகம் எனக்கு!
காலை வாரிவிட்டான்
இறைவன்!

கொடுங்கள் பெண்ணிற்கு
சம உரிமை!
எனப் பகலில் குரலெழுப்பும்
இரவின்
அடிமைகளுடன்
என்னையும் இணைத்தாள்!

ஓ......!
விலா எலும்பே!
ஆணினத்தின் கைவிலங்கை
கழட்டு
என்று
நிலாக்காலங்களில்
அழுகின்றேன் நான்!

**கடையநல்லூர் ஜமீலா**
**(சிங்கப்பூர்)**

# மௌனப்பாடம்


வண்ணத்துப் பூச்சி
எப்போதேன் தன் சிறகுகளை
மிகவும் வலிதாக மடக்கினால்
அவர்கள் கூவினர்: அமைதி!

அருண்ட பறவையொன்றன்
சிறகு சூரியக்கதிரில்
உரசுப்பட்டாலும்
அவர்கள் கூவினர்: நிசப்தம்!

இவ்வாறு அவர்கள்
முரசங்கள் மீது
இரையாது நடக்க யானைகட்டும்
மண்மீது நடக்க
மானுடர்க்கும் கற்பித்தனர்

வயல்வெளிகளில் மரங்கள்
ஒலியின்றி எழுந்தன
அச்சத்தில்
ரோமம் எழுவது போல..

Tymoteusz Karpowics
(போலந்து, வில்னோவில் 1921
பிறந்தவர்)
தமிழில் மணி



# புதுக்க விதை

# இங்கிலாந்தில் அதிகரிக்கும் இனவாதம்

## தி.உமாகாந்தன்

மேற்கு ஐரோப்பாவில் வெளிநாட்டவர்களுக்கெதிரான இனவாதம் மிக வேகமாகவே விரைந்து பரவிவருகிறது என்பதற்கு வெளிநாட்டவர்களுக்கெதிராக அதிகரித்த அளவில் நிகழ்த்தப்படும் வன்முறை ரீதியிலான தாக்குதல்கள் மாத்திரமல்ல வெளிநாட்டவர்களுக்கெதிரான மிக மோசமான அரசியல் கொள்கைகளைக் கொண்டிருக்கும் கட்சிகளுக்குக் கிடைத்துவரும் அதிக ஆதரவும் இப்போது அனைவரையும் அதிர்ச்சியடைச் செய்திருக்கிறது. கடந்தகாலங்களில் இனவாதத்தை அடிப்படைக் கொள்கையாக வரித்துக் கொண்ட பிரான்சின் தீவிர வலதுசாரி தேசிய முன்னணியும், சமீபகாலங்களில் ஜேர்மனியில் இனவாதத்தை தமது கொள்கையாகச் சுவீகரித்துக்கொண்ட தீவிரவலதுசாரிக் கட்சிகளும் (சமீபத்திய உதாரணம் ஹம்பேர்க் தேர்தல்) எப்படி இனவாதத்தை கிளறிவிட்டு தமது ஆதரவை பெருக்கி வருகின்றனவோ அதே போலவே இங்கிலாந்திலும் இனவாதக் கிளறல்கள் மூலம் வாக்குக்களைக் கைப்பற்றும் செயலில் தீவிரவலதுசாரிக் கட்சிகள் வெற்றியடையத் தொடங்கியுள்ளன.

இதனை சமீபத்தில் லண்டனின் கிழக்குமுனை நகரான மில்வோலில் நடந்த நகரசபைத்தேர்தல் முடிவு வெளிப்படுத்தியுள்ளது. பெரும்பாலும் உள்ளூராட்சித்தேர்தல் முடிவுகளுக்கு முக்கியம கொடுக்கப்படுவதில்லை ஆனால் மில்வெல்லில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தீவிரவலதுசாரி இனவாதக் கட்சியாகிய பிரித்தானிய தேசியக் கட்சியின்(British National party) டெரிக் பேக்கன், இங்கிலாந்தின் மூன்று பிரதம கட்சிகளின் வேட்பாளர்களையும் விட வெற்றி பெற்றுள்ளார். 47 வயதுடைய பேக்கன் "வெள்ளையர்களின் உரிமைக்காக" என்ற கொள்கையைக் கொண்ட கட்சியின் சார்பில் போட்டியிட்டவர் அதுமாத்திரமல்ல எல்லாக் கறுப்பர்களையும், இந்திய பாகிஸ்தானியர்களையும், இதர ஆசிய நாட்டவர்களையும் கட்டாயமாக வெளியேற்ற வேண்டும் என பகிரங்கமாகவே தேர்தல் பிரச்சாரம் செய்தவர். சுருக்கமாகச் சொல்வதாயின் வெள்ளையர் அல்லாதவர் எவராயினும் அவர் வெளியேற்றப்படவேண்டும் என்பதே அவரது தேர்தல் கோசமாக இருந்தது. அப்படியிருந்தும் அவர் முன்னணிக் கட்சிகளின் வேட்பாளர்களைவிட அதிக வாக்குகளை பெற்று தேர்தலில் வெற்றி பெற்றது இப்பகுதி மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

இந்தத் தேர்தல் முடிவு பலதரப்பினரையும் அதிரச் செய்திருக்கிறது. உதாரணமாக அரசியல் நடவடிக்கைகள் பற்றி அதிக ஆர்வம் காட்டாத கென்ரபெரியின் கிறீஸ்தவ பிதாமகன் ஜோர்ஜ் கரே இந்த வெற்றியை 'இனவாத சாத்தானின் உதயம்' எனக் குறிப்பிட்டதுடன் எங்களுடைய நாட்டில் நிலவுகின்ற ஜனநாயகத்தையும் சமாதானத்தையும், உறுதித்தன்மையையும் சீர்குலைந்து இங்கே வெறுப்பையும், பயத்தையும் , முரண்பாடுகளையும் தோற்றுவிக்கவே இந்த வெற்றி வழிகோலும் எனக் குறிப்பிட்டுள்ளார். அது மாத்திரமல்ல இனவாதத்தை கண்டிப்பதுடன் நின்றுவிடாது சகல சட்டரீதியான முறைகளிலும் அதற்கெதிரான போராடவும் என்றும் அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் முடிவுகாலத் தொடர்ந்து Skin Heads எனப்படும் மொட்டையர்களான பிரித்தானிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இனவாத எதிர்ப்புக் குழுக்களின் உறுப்பினர்களுக்குமிடையிலான மோதல்கள் லண்டனில் பரவலாக நடந்துள்ளன, அதுமட்டுமல்ல பேக்கோனின் வெற்றி லண்டன் பத்திரிகைகளின் முகப்புச் செய்தியாகவும் ஒலிப்பரப்புகளின் முக்கிய செய்தியாகவும் இடம் பெற்றிருக்கிறது. ஏனெனில் பிரித்தானிய தேசியக் கட்சியையும் சேர்ந்தவர் ஒருவர் இத்தகைய வெற்றியைப் பெற்றது இதுவே முதல்தடவை. அதுமட்டுமல்ல இந்தவெற்றி இனவாதக்கட்சியினராகிய இவர்களுக்கு ஒரு வகையான அங்கீகாரத்தைக் கூடப்பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல "தங்களுடைய சொந்தநாட்டிலே

## சுழலும் உலகம்



**"என்றன் இனத்தை ஒன்று சேர்க்காமல்**
**இறுதி எனக்கு வராது!**
**என் மொழி உலகாள வைக்காமல்**
**என்றன் உயிரோ போகாது!"**

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனுடன் சில மணித்துளிகள்

**ச.கிருஷ்ணராஜா**

"எல்லாச் சிறப்புகளையும் பெற்ற எம் மொழி இலக்கியம் உலக அரங்கில் ஏற்றி வைக்கப்படவேண்டும். வங்காள மொழிக்கு இரவீந்திர நாததாகூர்போல் எம் இலக்கியத்துக்கு விருது கிடைக்க எனது ஆயுள் வரை அயராது உழைப்பேன்" என ஆணித்தரமாக உரைக்கும் முதுபெருங்கவிஞர் பெருங்கவிக்கோவின் இளமைத் துடிப்பான செயற்பாடுகள் அவரது திறமைக்கு சான்றுகின்றன. பண்ணுட்டுத் தமிழுறவு மன்றத்தின் காரணகர்த்தவான இவர் தமிழில் பல பட்டங்களையும் பாண்டித்தியத்தையும் பெற்றவர். தமிழ் நாட்டு அரசினல் "கலைமாமணி" பட்டங் கொடுத்து கௌரவிக்கப் பட்டவர். இலக்கியத் துக்கான இவரின் சேவையைப் பாராட்டி உலகப் பல்கலைக்கழகம் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. பல்லாயிரக்கணக்கான கவிதைகளை எழுதிய இவரின் அறுபது கவிதை இலக்கியங்கள் இதுவரை நூலுருவில் வெளிவந்துள்ளன. மூன்று பெருங்காப்பியங்களும் ஐந்து சிறுகாப்பியங்களும் இதில் அடங்கும். இவரின் "காலக்கனி" என்ற காப்பியம் சென்னைப் பல்கலைக்கழகத்தில பட்டப்படிப்புக்கென அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இவரது பல படைப்புகள் பலராலும் போற்றப்பட்டது. ஆங்கில கவிதை நூல்களும் பயணக் கட்டுரைகளும் மதநூல்களும் இவர் கைவண்ணத்தில் வந்துள்ளன என்றால் இவரின் இலக்கியத் தொண்டின் பரிமாணங்களை நினைத்துப்பாருங்கள்.

மொழியின் பெயரைச் சொல்லிக் கொண்டு வசதி வாய்ப்புகளுடன் ஆடம்பரமான உலகத்தைச் சுற்றிச் செல்லும் வேறு சிலருடன் ஒப்பிடும்போது இவர் மிக வித்தியாச மானவராகவே தென்பட்டார். அவர் இங்கு தங்கிய சூழ்நிலைகளையும் மற்றவர்களுடன் தொடர்பு கொண்ட முறைகளும் அதற்கு சான்று. தானாகவே இலக்கிய ஈடுபாடு உடையவர்களையும் பத்திரிகைகளையும் சந்திக்க முயன்றும் இங்குள்ள சில முன்னணிப் பத்திரிகைகள் "ஏனோதானோ" என்ற கோதாவில் நடந்து கொண்டது வருத்தத்திற்குரியது. பல நாடுகளிலும் உள்ள தமிழர்களை ஒன்றுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பண்ணுட்டுத் தமிழுறவு மன்றம் என்பதை உருவாக்கி உலகெங்கணும் அதை விரிவுபடுத்தி வருகிறார். அண்மையில் உலகளாவிய மூன்றாம் மகாநாடு பேர்லினில் சிறப்பாக நடந்தது யாவரும் அறிந்ததே. பெருங்கவிக்கோ அவர்களை சந்தித்து உரையாடிய போது அவரின் பல கருத்துகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

நான்: "பழமையைப் போற்றியும் புதுமையின் பயனை வாழ்த்தும் இயல்புடைய நீங்கள் இன்றைய இலக்கியங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள். ஜெயகாந்தன், சுஜாதா அவர்களை போன்றவர்களின் படைப்புகளுக்கு இருக்கும் வரவேற்புக்கு மத்தியில் கலைஞர் போன்றவர்களின் மரபு சார்ந்த இலக்கியங்கள் எடுபடுவதில்லை எனக் கூறப்படுகிறதே"

பெருங்கவிக்கோ: "எடுபடுவதில்லை என்று நீங்கள் கூறுவது தவறு. பத்திரிகை பலம் இவர்களுக்கு இருப்பதனால் ஆக்கங்கள் அடிக்கடி வெளிவருகிறது. அதனால் பலரும் அத்தகைய படைப்புகளை படிக்கும் சந்தர்ப்பங்கள் கூட. இவர்களின் படைப்புகளும் நிச்சயமாக இலக்கிய வளர்ச்சியில் பங்கு கொள்கின்றன. பேட்டி ஒன்றில் சுஜாதா அவர்களை "இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் எப்படி இருக்கும்" எனக்கேட்டபோது "அப்போது தமிழ் இருந்தால் பார்த்துக் கொள்ளுங்கள்" என பதிலளிக்கிறார். இவர்கள் தமிழ் வளர்ச்சியில் எவ்வளவு அக்கறை உள்ளவர்கள் என்பது இதிலிருந்து புரியவில்லையா? அவரை தப்பாக சொல்ல வரவில்லை. இலக்கிய கர்த்தர்கள் வாசகர்களை சம்பாதித்துக் கொண்டால் மட்டும் போதுமா? மொழி முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளவேண்டாமா. இத்தனை காலமாக தமிழை அழியாமல் பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் புலவர்களும் தமிழ் இலக்கிய கர்த்தாக்களுமே. எத்தனையோ மொழிகள் அழிந்து கொண்டிருக்கின்றன. படைப்புகளில் பாதிக்கு மேல ஆங்கில மொழிப்பிரயோகம் இருப்பின் மொழி எப்படி பாதுகாக்கப்படும். வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில் கலைச்சொற்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. மற்றைய மொழிகளில் கலைச்சொல்லை உடனுக்குடன் அம்மொழியில் பெயர்த்துக் கொள்ள மொழி வளர்ச்சி ஸ்தாபனங்கள் உண்டு. எம் மொழியில் இதுவரையும் அப்படியான வசதிகள் இல்லை. இதனால்தான் ஆங்கில மொழிப்பிரயோகம் தவிர்க்கப்பட முடியாதிருக்கிறது.

நான்: "மரபுக் கவிதை செத்துவிட்டது" என கவிஞர் வைரமுத்து எழுதியிருந்தபோது அது சாகாவரம் பெற்றது என ஜூனியர் விகடனில் சீறியிருந்தீர்களே. புதுக்கவிதையின் இலக்கிய ஊடுருவல் பற்றி என்ன கருதுகிறீர்கள். மரபு இலக்கியத்தில் பரீட்சயமும் பாண்டித்தியமும் பெற்ற

தாங்கள் இரண்டாந்தரப்பிரஜைகளாக இங்கிலாந்து மக்கள் கருதுகின்ற நிலையை மாற்றுவதற்கு இந்தத் தேர்தல் முடிவு வழிகோலுகிறது" என்று பேக்கன் அறிக்கை விடுத்துள்ளார்.

பேக்கன் இந்த வெற்றி குறித்து குதூகலித்தாலும் ஆளும் கட்சி உட்பட அனைத்துக்கட்சிகளும் இந்த வெற்றி குறித்து கண்டனங்களையும் எச்சரிக்கைகளையும் வெளியிட்டிருக்கின்றன.

"இந்த முடிவு தவறுதலாக ஏற்பட்டதென்று நான் நினைக்கின்றேன். அதுமட்டுமல்ல இத்தகைய கொள்கைகளுக்கு எமது நாட்டில் இடமில்லை. இத்தகைய ஒரு பாதகமான முடிவு மீண்டும் எடுக்கப்பட மாட்டாது என நான் நம்புகின்றேன்" இதைச் சொன்னவர் பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர்.

உள்ளூராட்சி அமைச்சரான மைக்கேல் ஹவார்ட் இந்தத் தேர்தல் முடிவு குறித்து தாம் மிகுந்த அதிர்ச்சி அடைவதாகக் கூறியுள்ளார்.

சுற்றுபுறச் சூழல் அமைச்சரான யோன் ஹம்மர் இந்த வெற்றி பற்றி கருத்துத் தெரிவிக்கையில் "ஒரு கேவலமான குழுவினூடாக வெற்றியைப் பெற்றிருக்கும் பேக்கனுக்கு நாகரீகமான மனிதர்கள் யாரும் ஆதரவு கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை" என்கிறார்.

தொழில்கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரான ரொனி பிளெயிர் கருத்துத் தெரிவிக்கையில் "ஜனநாயகம் மிக மோசமாக விரக்தியடைய வேண்டிய நாள் இது" எனக் குறிப்பிடுகிறார்.

லிபரல் ஜனநாய கட்சித் தலைவராகிய திரு.படி ஆஷ்டவுன் "இந்தத் தேர்தல் முடிவினால் தாம் மிகுந்த துக்கமும் அதேசமயம் மிகுந்த ஆத்திரமும் அடைவதாக" கூறியுள்ளார்.

சமீபநாட்களாக முன்னர் கிழக்கு லண்டனில் பங்களாதேஷ் இளைஞன் ஒருவன் வெள்ளையர் குழுவொன்றினால் தாக்கப்பட்டு கோமா நிலைக்கு தள்ளப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக பல இடங்களில் வன்முறை மோதல்கள் நடந்தன. இந்தச் சம்பவம் நடந்த ஒருவாரத்தின் பின்னரே தேர்தல் நடந்தது.

கடந்த நான்கு வருடங்களாக இலண்டனில் இனவாதத் தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. ஒவ்வொரு வருடமும் இத்தகைய தாக்குதல்கள் முதல் வருடத்தை இரண்டு மடங்காகியிருக்கின்றன. 1992 ஆண்டில் இங்கிலாந்தில் 7,993 இனவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன. அதிகரித்துவரும் இனவாதத் தாக்குதல்கள் மட்டுமல்ல பேக்கன் போன்றவர்களது கட்சிக்குக் கிடைத்துவரும் ஆதரவு இங்கிலாந்தில் உள்ள வெளிநாட்டவர்களுக்கு அச்சத்தை ஊட்டியுள்ளன. பிரித்தானிய தேசியக் கட்சியானது நாடுதழுவியளவில் பலமான அமைப்பாக இல்லாவிடினும் சில இடங்களில் இக்கட்சிக்குக் கிடைத்துவரும் ஆதரவு வெளிநாட்டவர்களை அதிரச் செய்கிறது.

திரு. பேக்கன் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஹம்லெற்ஸ் பொரோ சபையின் இதர உறுப்பினர்கள் பேக்கனோடு எந்தத் தொடர்பும் வைக்க மறுத்ததன் மூலம் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர். மேற்படி சபையில் பணிபுரிபவர்களில் 20%மானவர்கள் வெள்ளையரல்லாதவர்கள். இவர்கள் தம்மை நாட்டைவிட்டு வெளியேற்ற முனைவதை நோக்கமாகக்கொண்ட ஒருவரோடு பணிபுரிய மாட்டோம் என எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தி உள்ளனர்.

மேற்படி சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் பேக்கன் பங்குகொள்ள வரும்போது தாம் மறியல் செய்யப்போவதாக ஆசிய அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

தனது தேர்தல் பிரச்சாரங்களில் வெளிநாட்டவர்களுக்கெதிரான மிக மோசமான கருத்துக்களை பேக்கன் வெளியிட்டு இனவாதத்தை தூண்டியதே வெளிநாட்டவர்களது கடுங் கோபத்துக்கான காரணம்.

வேலையற்ற வாகனச் சாரதியாகிய பேக்கன் இனங்களிடையே மோதல்களை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தது. சராசரியாக குறைந்த வருமானத்தைப் பெறும் வெள்ளை இனமக்களிடையே ஆசிய மக்களுக்கெதிரான வெறுப்பைத் தூண்டிவிடும் வகையிலேயே பேக்கனின் பிரச்சாரங்கள் இருந்தன. உதாரணமாக வதிவிடப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கும் இப்பகுதியில் அரசகுடியிருப்புகள் வெள்ளையர்களுக்குக் கிடைப்பதில்லை ஆனால் ஆசியர்களுக்கு இலகுவாகக் கிடைக்கின்றன என்றெல்லாம் பேக்கன் பிரச்சாரம் செய்திருக்கிறார். தேர்தல் வெற்றிக்குப் பின்னரும்கூட இவர் தனது நடைமுறைகளை மாற்றவில்லை. நான் வெள்ளையர்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். ஆசியர்களையில்லை அவர்களின் நலன் குறித்து எனக்கு எந்த அக்கறையுமே இல்லை. நான் அவர்களுக்காக எதையும் செய்யப்போவதில்லை. அவர்களுக்கு இந்தநாட்டில் வாழ்வதற்கான எந்த உரிமையுமே இல்லை என்கிறார்.

இனவாதக் கட்சியாகிய பிரித்தானியத் தேசியக்கட்சியின் இன்றைய இந்த வெற்றி சிறியதல்ல. ஏனெனில் வாக்குகளைப் பெறுவதற்காக மேற்கு ஐரோப்பாவின் இதர முன்னணிக்கட்சிகளைப் போல இங்கிலாந்தின் முக்கிய கட்சிகளும் வெளிநாட்டவர்களுக்கெதிரான கொள்கைகளைச் சுவீகரித்துக் கொண்ட இனவாதம் பரவி இனங்களுக்கிடையிலான மோதல்கள் தொடர்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

கவிஞர் மேத்தா போன்றவர்கள் கூட இன்று புதுக்கவிதையில் புகுந்து விளையாடுவது நீங்கள் அறிந்ததுதானே"

பெருங்கவிக்கோ: கருத்துடன் இலக்கியநாதம் சேர்ந்த கவிதைகள் அவை எவ்வகையானாலும் இலக்கியவளர்ச்சியில் பங்கு கொள்ளும் என்பது மறுக்கமுடியாதது. வளர்ச்சி என்று சொல்லும் போது பிறிதொன்றில் இருந்துதான் அது ஏற்படமுடியும். ஆனால் மரபே தெரிய முயற்சிக்காமல் புதுக்கவிதை எழுதும் பலர் ஏதோ சில வரிகளை கிறுக்கிவிட்டு இதுதான் கவிதை என்றும் மற்றெல்லாம் கவிதையில்லை என்று சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். இலக்கிய பங்கெடுப்பில் சகலரும் இணைய இது உதவுமாயினும் இலக்கிய வளர்ச்சியில் பெரும் மாற்றத்தை இது ஏற்படுத்துமா? அர்த்தமே இல்லாத வெறும் எதுகை மோனையுடன் மரபுக்கவிதை இல்லையா என்று கேட்கலாம். மரபுக்கவிதை அனுபவத்துடன் புதுக்கவிதை எழுதுபவர்களின் ஆக்கங்களை பார்த்தால் மரபின் தாக்கத்தை அங்கே காணலாம். கவிஞர் மேத்தாவும் மரபுக்கவிதையின் முக்கியத்துவம் பற்றி எழுதியிருக்கிறாரே. மீண்டும் சொல்கிறேன் கருத்தும் நயமுந்தான் முக்கியமென்று. புதுக்கவிதை முறை ஒன்றும் புதிய கண்டுபிடிப்பல்ல. சங்க இலக்கியங்கள் சில அப்படித்தான் இருக்கிறது. 'செந்தொடை" என்று இதைக் கூறுவார்கள்.

நான்: "பாமர மக்களால் புரிந்து கொள்ளக் கூடியதாய் அமையாத படியால்தான் மரபுக்கவிதைகளிலும் புதுக்கவிதை வரவேற்பைப் பெற்றுள்ளதாய் கருதப்படுகிறது. சாராரண மக்களை சென்றடையாத இலக்கியம் அவசியமா?"

பெருங்கவிக்கோ: பாமர மக்கள் கிராமப்புறங்களில் தினம்தினம் படிக்கும் நாட்டுப்பாடல்கள் மரபுக் கவிதைகள்தானே. அவர்களுக்கு புரியவில்லையா என்ன. எத்தனையோ புதுக்கவிதைகள் விளங்காதபடி எழுதப்பட்டிருப்பதை நீங்கள் காணவில்லையா? "விளங்கிக் கொள்வது" என்பது காலத்துக்கு காலம் வேறுபடும். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பான சங்கஇலக்கியங்களில் அன்று விளங்கிக் கொள்ளப்பட்ட சொற்பிரயோகம் பின்னர் சில காலத்தின் பின் விளங்காமையால் பொழிப்புரை தேவைப்பட்டது. தற்காலத்தில் அந்தப் பொழிப்புரையும் விளங்காமல் பொழிப்புரைக்கு ஒரு பொழிப்பு தேவைப்பட்டது. இப்போது விளங்கக்கூடியதாக எழுதப்படும் இலக்கியங்களுக்கு இன்னும் சில காலம் செல்ல பொழிப்புரைகள் தேவைப்படும். அது புதுக்கவிதையோ மரபுக்கவிதையோ எதுவாயினும். இது காலத்தினால் ஏற்படும் மாற்றம். புதுக்கவிதை என்பது வளர்ச்சி மாற்றம் என்பதிலும் ஒரு "அலை" யென்றே சொல்லலாம். மரபுக் கவிதை என்பது விளங்க முடியாதது என்பது தப்பான கருத்து.

நான்: "பழைய விஷயங்களையே திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருப்பதிலும் புதிய கருத்துக்களையும் காலத்தோடு சேர்ந்த முன்னேற்றங்களையும் எமது

29ம் பக்கம் பார்க்க..


**சிவாஸ் ரேடிங் கோ**
**மாபெரும் மலிவு விற்பனை**

**டின்னில் அடைத்த பழவகைகள்**
(நுங்கு, கொய்யாப்பழம் போன்றன)
**50 சதம் மட்டுமே**

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| மரக்கறி எண்ணெய் 3l | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ | 4.99 |

| | |
|---|---|
| கோழிக்கால் ரூத் (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) | .69 |
| உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ரூத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | .48 சதம் |
| முட்டை (Tray of 30) (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | .99 சதம் |

**இவ்வார ஸ்பெஷல்**
**பஸ்மதி அரிசி 20 கி**
**27.99**

**Fresh frozen King Fish**
**2.99Lb**

மேலதிக விபரங்களுக்கு
பின் அட்டையைப்பார்க்க..

# குடும்ப உறவும் சிக்கல்களும் (தொடர்ச்சி)

## அருண்

அனுபவப்பட்ட பெற்றோர்களே தம் பிள்ளைகளுக்கு துணைதேடும் போது கல்வித்தகைமை தராதரம் பார்க்கிறார்களே தவிர தம் பிள்ளைகளின் "போக்குகளை" உணர்ந்து ஏற்றவர்களை தேடிக் கொடுக்காதது கவலைக்குரியது. கல்வித்தகைமை தராதரம் போன்றவற்றுக்கும் தாம்பத்திய போகத்துக்கும் கூடிய அளவில் சம்பந்தம் இருப்பதே இல்லை. ஆனால் இது மனோவியல் தொடர்பானது. இவர்கள் வளர்ப்பு முறையாலோ சூழலாலோ தாமே எடுத்து வைத்திருக்கும் தவறான முடிவுகளின் பிரதிபலிப்பாலோ இது நிகழ்வது. எல்லாம் மனதுதான் மாற்றங் கொள்ளக்கூடியதே இது.

படிப்பு பரம்பரை உருவம் இதில் உயர்வு தாழ்வென அநாவசிய முடிவுகள் வைத்திருக்கும் மனம், தம்பதியரில் ஒருவருக்கேனும் இருந்தால் கூட தாழ்வு மனப்பான்மையோ, தாழ்வாய் மதிப்பிடலோ இங்கு ஒரு நோய். தனது துணைக்கு தான் பொருத்தம் இல்லாதவர் என்ற மன நெருடலுடன் குடும்பம் நடத்துவோர் உளர் இதில் சிலர் எதற்கெடுத்தாலும் இது பற்றியே கவலைகளை படரவிட்டு கொள்வர். சிலர் இக்காரணத்திற்காகவே தன் துணை இப்படி நடந்து கொள்ளுது என விசனிப்பர். சிலர் தன் துணையால் இது தொடர்பாய் குத்திக் காட்டப்படும்போது துவளுவர் இத்தகைய நிலமைகள் குடும்பத்தில் குதூகலத்தை தக்க வைத்துக்கொள்ள பகைகளாகும் மனிதன் எவனையும் சமனாய் மதிப்பதை பேணமுடிந்தால் இந்நோய் குணமாகும்.

சில குடும்பங்களில் தேனீக்கள் வாழ்முறை அதாவது பெண் அக்குடும்பங்களில் ஆணையும் பெண்ணையும் பேதமற நினைத்தால் இதில் குறைவாய் மதிப்பிட என்ன இருக்கிறது. கணவனின் பங்கு குறைவாய் இருக்கும் குடும்பத்தில் மனைவி தன் பங்கை கூடுதல் படுத்தி குடும்பத்தை நிவர்த்திப்பது ஆரோக்கியமானதே. அதேநேரம் கணவனை மனைவியை அடிமையாய் கருதிக்கொள்வது கண்டனத்துக குரியது அவர் ஆண் என்பதற்காக அல்ல: ஆணோ பெண்ணோ இன்னொரு வரால் அடிமைப்படுத்தப்படல் குற்றமானது.

சில தம்பதியர்க்கு குழந்தை அமையாத நிலமை. இங்கு கணவன் மனைவி ஒருவரை ஒருவர் குற்ற உணர்வில் பார்க்கும் மனப்பான்மையுடன் வாழ்கின்றனர். இம் மனப்பான்மையின் விதைக்கு சமுதாயம் ஒரு மூலம் குழந்தை பெறுவது ஆண்மையின் வீரியம் என்றும் தாய்மையின் இலக்கணம் என்றும் சமுதாயம் தவறான விதிமுறையை வைததுக்கொண்டிருக்கிறது. இது உடைக்கப்பட வேண்டும். ஆண்மைக்கும் குழந்தை பெறுவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது போல்தான் தாய்மை என்பதற்கும் குழந்தை பெற்றுக் கொள்வதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. (இதை கதை கவிதை கட்டுரை எழுதுவோர் கவனத்தில் எடுக்க வேண்டுகிறேன்) குழந்தை பெறுவதை நிறைவாய் கருதும் சமுதாயம் இன்னொன்றையும் கருத்தில் எடுக்க வேண்டும் சமுதாயத்தை திருத்திப்படுத்தவே குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளும் எம் சமுதாயத்தில் உள்ளனர். சுயவிருப்பை மீறி குழந்தை பெற்றுக் கொள்ளுவோர் குழந்தைகள் மேல் பெருவிருப்புக் கொண்டோருக்கு குழந்தை தங்காத போது ஆறுதல் சொல்லாமல் சமுதாயம் நிந்தனை செய்வது எவ்வகையில் நியாயம்? குழந்தை அமையாதது குறையே அல்ல என்ற விஞ்ஞான உண்மையை சமுதாயம் அத்தம்பதியருக்கு கருத்தில் எடுக்க வேண்டும். இவ்விடத்தில் ஒரு ஆலோசனை. குழந்தைக்கட்டுப்பாட்டில் விஞ்ஞான முடிவுகளை அணுகும் கணவன் மனைவி குழந்தை பெற்றுக்கொள்வதற்கான விஞ்ஞான முடிவுகளையும் ஏற்று அதற்கான அணுகு முறையையும் கைக்கொள்ள வேண்டும். இவ்விரண்டுக்குமாக வைத்தியரை நாடுவது கேலிக்குரியதென்பது எம் சமூக அமைப்பில் இருந்து மாற வேண்டும்.

வற்புறுத்தலால் சிலர் தம்பதிகளாகலாம். இத்தகைய தம்பதியரில் ஒருவர் குறைகளை ஒருவர் பெரிது பண்ணாமல் நடந்தால் கூட மற்றவர் உள்ளத்தின் அடியில் உறைந்த திருப்தியின்மையால் அத்தம்பதியரிடையில் சீரில்லாத தாம்பத்தியமே சாத்தியமாகும். நாங்கள் ஒன்றை கருத்தில் எடுக்க வேண்டும். யாருக்கும் கணவனோ மனைவியோ இது இது இருக்கவேண்டும் என்று 'ஓடர்' கொடுத்து பெற்றுக் கொள்ளக்கூடியதல்ல. வரைந்து வைத்தே அச்சாய் வருவதில்லை. முன்னே பின்னே பிறிதொரு சம்பவம். அண்மையில் இலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட மனைவி கூறிக்கொள்ளும் புகார். "....அவர் திங்களிலை இருந்து வெள்ளிவரை வேலை. வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்தாலும் Football விளையாடப் போயிடுவார். சனி ஞாயிறு Match அப்பப்ப வந்திடும். இரவிலை படுக்கை மட்டும் சந்திக்கிற மாதிரித்தான் இருக்குது. Summer லை தான் எங்கை போறதெண்டாலும் போகலாம் எண்டு கனபேர் சொல்லுகினம். வந்து மூண்டு மாதமாச்சு. இப்ப பாத்தா ஏண்டா வந்தம் எண்டிருக்குது......"

இந்த மனைவியின் முறையீட்டில் சோகங்கலந்த நியாயம் இருக்குது. ஒரு மனைவிக்கு உடை உணவு உறையுள் மட்டும் போதும் என கருதிக் கொண்டிருக்கும்

கணவன்மார் மீதான குற்றச்சாட்டிது. எம் சமூக நடைமுறையில் அதிக பட்சப் பெண்களின் ஆசைகள் குடும்பநிலை வளர்ப்பு முறை காரணமாக பெற்ருேருடன் வாழுங்காலத்தில் பலிப்பதில்லை. கலியாணம் முடிந்தால் நிறைவேறும் எனும் எதிர்பார்ப்பில்தான் பெற்ருேருடனை அவர்கள் வாழ்வு அமைகிறது. கலியாணம் முடிந்து வாழ்க்கை வெளிநாட்டில் என்ருல் இவர்கள் ஆசைகள் இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். ஆனுல் பல கணவன்மார்கள் மனைவியின் ஆசையை அறியக்கூட முயல்வதில்லை. இதனுல் இம்மனைவிமார்களின் மனதில் ஒருவகை விரக்தி அப்பிக் கொள்கிறது.

கணவன் தன்னுடன் இருப்பதையே எந்த மனைவியும் விரும்புவாள். வீட்டில் படம் பார்க்கும் போது கூட தன்துணையுடன் இருந்து பார்ப்பதில் எந்தத் துணைக்கும் விருப்பம் இருப்பது மறுப்பதற்கில்லை. எனவே கணவன்மார்கள் அநாவசியமாக மனைவியைப் பிரிந்திருக்க நேரத்தை இயன்றவரை மட்டுப்படுத்த வேண்டும். மனைவியின் ஆசைகளை முடிந்தவரை நிறைவேற்றவேண்டும். அதற்காக மனைவி தன் அநாவசிய ஆசைகளையும் கணவன் நிறைவேற்றவேண்டும் என்பதல்ல..

இன்னெரு சம்பவம்......

வேலைக்குச் செல்லும் மனைவி. சமையல் வேலையும் அவள் மேல்தான். கணவனின் ஒத்தாசை எப்போதுமே இருந்ததில்லை. இந்நிலையில் விடுமுறை நாட்களில் தன் சினேகிதர்களையும் அழைத்து அவர்களுக்கு சாப்பாடும் ஆயத்தப்படுத்தச் சொல்லி மனைவியைக் கட்டளையிட்டுவிட்டு அவர்களின் குடியைச் சுவையூட்ட அதைப்பொரி இதைப்பொரி என்று ஏவல் செய்தால் எப்படியிருக்கும்? இது பிள்ளை பெற்ற வலியுடன் இருக்கும் பெண்களுக்கும் நேர்ந்திருக்கிறது. இத்தகைய கணவன்மார்களே! உங்கள் மனைவியும் மனிதப் பிறவிதானே. ஓய்வு ஆறுதல் அவளுக்கும் தேவைதான். சிந்தியுங்கள்!

மனைவிக்கு கணவனும் கணவனுக்கு மனைவியும் ஒத்தாசையாய் இருந்தால்தான் தாம்பத்தியம் செழிக்கும் உபத்திரவமாய் அமையக்கூடாது. சமையலில் உடுப்பு துவைப்பதில் ஆண்கள் பங்கேற்பது கேவலமானதல்ல. உங்கள் மனைவியை "ஏன் இந்த வாழ்க்கை" என்று அலுக்க வைக்காதீர்கள். அதே நேரம் பிள்ளைகள் பராமரிப்பதில் பிள்ளைப்பேறு காலத்தில் உதவும் கணவனின் நல்ல பண்புகளை மனைவி புரிந்து கொள்ளவும் வேண்டும். அவர் எல்லாம் செய்வார் என்று சுமையை அவர்மேல் மட்டும் விட்டுவிடாதீர்கள். பல குடும்பங்களில் கணவனே மனைவியோ அல்லது இருவருமோ தம் உறவினர்களை தம்முடன் சேர்த்து வைத்திருப்பதுண்டு. இப்படி ஒன்ருய் வாழ்தலினுல் சில சௌகரியங்கள் இருக்கலாம். இருந்தும் அசௌகரியங்கள் அதிகம். இவை நேரடியாகவோ மறைமுகமாகவோ தாம்பத்தியத்தை பாதிக்கிறது. கணவன் மனைவி ஏதும் கதைப்பதென்ருல் கூட எவருமில்லாத சந்தர்ப்பத்துக்கு ஏங்க வேண்டிவரும். ஒரே வீட்டுக்குள்ளேயே இரகசியம் பேசவேண்டிவரும். பரிபாஷையில்கூட விளக்க நேரும். இத்தகைய சூழலில் கணவன் மனைவி திறந்த மனத்துடன் கருத்துப் பரிமாறுவதோ கலந்தாலோசிப்பதோ எங்ஙனம்? கலியாணம் முடிந்தும் களவொழுக்கம் தேவைப்படும். இவை வெளியில் தெரியாவிடினும் தாம்பத்தியத்தில் பூரணமின்மையே இருவராலும் உணரப்படும்.

சில குடும்பங்களில் உழைப்பதை மட்டுமே கணவன்மார் திறம்படச் செய்வார்கள். அவர்களுக்கு தம் பிள்ளைகள் எத்தனையாம் வகுப்பு படிக்கிருர்கள் என்பதே தெரியாது. தாம்பத்தியத்தில் தம்மை தீவுபோல சமைத்துக்கொண்டவர்கள் இவர்கள். இத்தகைய குடும்பங்களில் சுமையையும் வேதனையையும் சுமப்பவள். மனைவியே. எம் சமூகத்தில் பல பெண்கள் இத்தகைய கொடுமைகளைப் பெரிதுப் படுத்துவதில்லை. காரணம் இவையெல்லாம் தம் கடமையென இவர்கள் எண்ணிக்கொள்வதே. "பெண்ணுய் பிறப்பது கொடுமை" எனச் சொல்லிக் கொள்ள மட்டும் தெரிந்த இவர்கள் தம் அறியாமையைப் போக்க முனைவதில்லை. தாம் கொண்டிருப்பது அறியாமை எனப் புரிந்து கொள்ளவே முடியாதவர்கள் இவர்கள். ஆனுல் மாறிவரும் சமூக அமைப்பில் பெண்களின் விழிப்பு படிப்படியாக அவர்கள் சுமக்கும் வேதனையினதும் சுமையினதும் பெறுமானத்தை உணரத் தலைப்பட்டுள்ளது. இதனுல் இவர்கள் சிறுகச்சிறுகச் போராட முனைப்புக்கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. இதனுல் கணவன்மார் இவர்களின் குமுறல்களை அனுசரித்து தமது அணுகுமுறையில் மாற்றத்தை உண்டு பண்ணினுல்தான் இல்லறம் சிறக்கும்.

ஒரு ஆணினதும் பெண்ணினதும் இணைவுக்கு காமமே அடிப்படையானது எனச் சொல்லிக் கொண்டாலும் எம் சமுதாயத்தை பொறுத்தவரை இந்த ஆணும் பெண்ணும் இணைந்து "குடும்பம்" என ஆகும்போது அந்த அடிப்படையுடன் கடமை அரவணைப்பு சமூக உறவு என்பனவும் அதற்கு ஈடான பங்களிப்புடன் அத்திவாரமாகிறது. இது அவ் ஆணினதும் பெண்ணினதும் மனமொத்த கூட்டால்தான் வலிமை பெறுகிறது. இதற்கு சுயநலமற்ற மற்றவர்களின் உணர்வைப் புரிந்து கொள்ளும் இயல்பு விட்டுக் கொடுப்பு அனுசரணை செய்யக்கூடிய பண்பு கருத்தறியக்கூடிய கருத்துத் தெரிவிக்கக் கூடிய பக்குவம் என்பன அவசியம். இது மனம் என்னும் அலகால் தீர்மானிக்கப்படுகிறது.

ஆக இந்தத் தாம்பத்தியம் எனும் விருட்சத்தின் ஆரம்பவிதை "மனம்" தான். இந்த விதையின் வியாபிப்புத்தான் அந்த விருட்சம் முழுதிற்கும்.

## குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

இன்று வழக்கம்போல் வேலைக்கு வருவதற்காக சென் கிளயர் சப்வேயில் நின்று கொண்டிருக்கின்றேன். சிந்தனையை அழகிய பெண் குரலொன்று கலைத்து விடுகின்றது.

"ஹலோ ராகவன்."

திரும்பினால் மறுபடியும் மனோரஞ்சிதம் வாடியுலர்ந்து போயிருக்கின்றாள். அந்தக் கவர்ச்சி மிக்க கனவுலகக் கண்களில் கொடிகட்டிப் பறந்த அந்தக் காந்தமெங்கே? இவளைத்தான் இந்த அழகைத்தான் ஒரு காலத்தில் நடுநிசி உறக்கத்தையுமிழந்து சிந்தித்தேனா என்றிருக்கின்றது. ஒரு காலத்தில் புதன் கிழமை இரவுகளில், ஒலிபரப்பாகும் இந்திய வானொலியின் நேயர் விரும்பிக் கேட்டவையில், பழைய சினிமாப்பாடல்களைக் கேட்டபடி உருகி உருகிக் கிடந்தது இவளிற்காகத் தானா என்றிருக்கின்றது? சிரிப்பாகவுமிருக்கின்றது.

"நீர் நல்லா வயக்கெட்டுத்தாக் போய் விட்டீர்" என்கின்றேன். அவளது கண்களில் மெல்லிய மலர்ச்சி

"ஆ.... இந்தத் தமிழைக் கேட்டு எவ்வளவு நாளாச்சுது... கேட்கேக்கையே எவ்வளவு சுகமாயிருக்குது..."

"என்ன ஏதாவது பிரச்சினையே.. .. நல்லா வாடிப்போனீர்... இந்த நேரத்திலை எங்கை போட்டு வாறீர்.."

எனது கேள்விக்கு அவளது பதில் எல்லாவற்றையும் புரிய வைக்கின்றது. ஆசை யாரைத்தான் விட்டது... இவளும் புருஷனுமாக வாங்கிய வீட்டை விற்கவும் முடியாமல், மோட்கேஜ் கட்டவும் முடியாமல்.... இருவரும் இரண்டு வேலைகள் செய்கிறார்களாம். பகலில் பாங்கில் வேலை செய்யும் இவளது புருஷன், நள்ளிரவிலிருந்து விடியும்வரை செக்யூரிடி கார்டாக வேறு வேலை பார்க்கிறார், இவளும் பகல் முழுக்க ஒரு ட்ரஸ்ட் கொம்பனியிலை வேலை செய்துவிட்டு பின்னேரங்களில் பகுதி நேர வேலையாக ஒரு புத்தகக் கடையில் காஷியராக வேலை பார்க்கிறாள்... இருந்தும் இவர்களால் வீட்டிற்கு மோட்கேஜ் கட்டுவதே பெரிய கஷ்டமாகி விட்டது.

"கண்டறியாத கனடா வாழ்க்கை. இப்படித் தெரிந்திருந்தால் ஊரிலையே கிடந்து செத்துத் துலைத்திருக்கலாம்" என்று விட்டுத்தான் போனாள் போகும் போது மனோரஞ்சிதம். இவர்களைப்போல் வண்டில் மாடுகளாக எத்தனை பேரை கனடா மாற்றி விட்டிருக்கின்றது. வண்டில் மாடுகள், செக்கு மாடுகள், நல்ல உவமை உழைப்பது வாழ்வதற்கா? இல்லை வாழ்வது உழைப்பதற்கு! இது தான் இங்குள்ள நிலை. மாடுமாதிரி உழைப்பது மோட்கேஜ் அது இதென்று பலவிதமான செலவுகள், அனுபவிக்க வேண்டிய, தேவையான சுகங்களை இழந்து வெறும் நடைப்பிணங்களாக....

"எங்கடாப்பா........என்ன மச்சான் எங்கையடா கனநாளாய்க் காணேலை.."

"உனக்குத் தெரியாதே மச்சான். ..... போன மாசத்திலையிருந்து பாங்கிலை....

"என்னடி...உன்ரை புருஷன் என்னடி செய்யிறார்... "அவரடி.... பாங்கிலை..."

ஊரிலை ஒரு 'கோண்மேந்து' உத்தியோகம் போல் இங்கொரு பாங்க். ... போலியான வறட்டுக் கௌரவங்கள்.

மனோரஞ்சிதத்தின் நிலை ஒரு மாதிரி, நகுலேஸ்வரனின் நிலை இன்னுமொரு மாதிரி, மனைவி பிள்ளைகளை இழந்த இன்னுமொரு பிரகிருதிதான். தோள்களிலும், மாரிலும் கொஞ்சிய தளிர்ப் பாதங்களின், மழலையின், கற்பனைகளை வாழ்க்கையாக்கி வளையவரும் உலர்ந்துபோன கூடுகளாக ....இவனைப் போலும் பலர் இவர்கள்தான் இப்படியென்றால்....என்நிலை....

குடும்ப உறவுகள் பிரிபட்டு உழைக்கோணும்.. வீட்டிற்கு ஒரு வழி செய்யோணும்... தம்பியை மெதுவாய் இங்காலை கூப்பிட்டு விடவேணும்.... அக்காவின்ர கல்யாணத்தை இந்த வருஷமாவது முடித்து விடவேண்டும்... அதன்பிறகு பிறகு... பிறகுதான் என்ர வாழ்க்கையைப் பற்றி ஒரு திடமான முடிவிற்கு வரு முடியும்....

இதுமட்டுமா...இன்னும் பலர் சொந்த முகங்களையே இழந்தவர்கள்... 'தமிழா என்ன? அப்படியொரு மொழி இருக்குதா' என்பதுபோன்ற ஒரு நிலைமை.... இவர்களிற்கு தாய்மொழி செத்த மொழி அர்த்தமற்றும் போன மொழி, நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளின் மொழி 'டாடி' 'மம்மி' ....பெற்றவர்கள் தான் எவ்வளவு பூரிச்சுப் போய்விடுகின்றார்கள். ஜென்ம சாபல்யம் அடைந்து விட்டார்களோ... ஆனால் இவர்களையும் மீறி, தடைகளை வென்று வளர்ந்த மொழி மீண்டுமொரு முறை வென்று தான் தீரப்போகின்றது.

.....

இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம்... அரசியல்....சொந்த மண்ணின் அரசியல்...மரணத்தை வாழ்வாக்கி விட்ட வாழ்வையே சாவாக்கி விட்ட அரசியல்...அறியாமை. ..ஆத்திரம்....குரோதம் ..வெறிநிறைந்த அரசியல்....

அரசியல் பழையபடி நினைவுகளைப் பின்னோக்கி இழுத்து விடுகின்றது. தேர்தல் காலம் நெருங்கியிருந்தது. வன்னித்தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்ட செல்லத்தம்புவை ஆதரித்து தமிழரசுக்

கட்சியினரால் கூட்டங்கள் நடத்தப்படத் தொடங்கி விட்டிருந்தன. அப்பா ஒரு தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். தேர்தல் நெருங்கும் சமயங்களில் அப்பாவிற்கு சுதந்திரனின், தேர்தல் காலங்களில் வரும் அந்தனி சிலின் தீப்பொறியின் தேவை அதிகமாகி விடும். முதன் முறையாக தமிழரசுக்கட்சி பற்றியும், தமிழ்ப் பிரச்சினைப்பற்றியும் தகவல்களை நான் பெற்றது இந்தப் பத்திரிகைகள் மூலம்தான். சாவகச்சேரி உறுப்பினராகப் போட்டியிட்ட நவரத்தினம் பற்றிச் சுதந்திரனில் வாசித்தது இன்னமும் ஞாபகம் இருக்கிறது. தமிழ்ப்பிரச்சினை தீருமட்டும் தாடியை வெட்டுவதில்லையென்ற இவரது சபதத்தை முதன் முறை அப்பொழுது தான் அறிந்தேன். அதன்பிறகு வெகுநாட்கள் வரை எனக்கு ஒரு சந்தேகமிருந்தது. பொதுவாக நாட்பட நாட்பட வெட்டாத தாடி வளர்வது தானே இயற்கை ஆனால் நவரத்தினத்தின் தாடி மட்டும் வளர்வதில்லையே ஏன் என்பது தான் அந்தச் சந்தேகம். நவரத்தினத்தின் வெட்டாத தாடி வளர்வதில்லையே ஏன் என்றொரு விடுகதை போடலாமா என்று கூடச் சிலசமயம் சிந்தித்ததுண்டு.

முதன்முறையாக தமிழரசுக் கட்சியினரின் தரிசனம் கிட்டியது வவுனியா நகரசபை மைதானத்தில் தான். அப்பாவுடன் போயிருந்தேன். கூட்டம் பொங்கி வழிந்தது. மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து ஒட்டியுலர்ந்து பழுத்துப் போன தந்தை செல்வாவின் பேச்சு நடுங்கியது. கூடத்துணையாக தந்தைக்கு உறுதுணையாகத் தாங்கிப் பிடித்தபடி தானைத்தலைவர், ஒருகாலத்தில் தமிழர்க்காக அடிவாங்கி, உதைவாங்கி, சிறைசென்ற செம்மல், இந்நாளைய துரோகி, அமிர்தலிங்கம் அவர்கள் முதற கூட்டத்திலேயே எனக்கு மங்கையற்கரசியின் பாட்டும், அமிரின் பேச்சும் நன்றாகவே பிடித்துப் போய் விட்டன. அந்த வயசில் எனக்குப் பிடித்த இன்னுமொரு பேச்சாளர் ஆலாலசுந்தரம் இவரது பேச்சு நறுக்குத் தெறித்தாற் போன்றது என்பார்களே.. . அப்படிப்பட்டது. எதிரில் எதிராளி இருப்பது போல் உருவகித்துக் கொண்டு கடுமையாக, நளினமாகச் (நிச்சயமாக நக்கலில்லை) சாடுவதில் வல்லவர் இவர். இதன்பிறகு நான் தமிழரசுக் கட்சியினரின் கூட்டங்களென்றால்.... போகாமல் விடுவதேயில்லை. ஒருமுறை வீட்டாரிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட்டத்திற்குச் சென்றுவிட்டு, நகரசபை மைதானத்தில் தூங்கிக் கிடந்தவனை அப்பா வந்து எழுப்பிக் கூட்டிப் போனாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இன்னுமொரு கூட்டத்தில் மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின், கையெழுத்துக்களை ஆட்டோகிராபில் வாங்கினேன். அதில் மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கூட ஏதோ 'சாகும்போதும்.... தமிழே சலசலத்து ஓடவேண்டும்' என்பதுபோன்ற ஒரு வசனத்தை எழுதியிருந்தா. அந்த 'ஆட்டோகிராப்' 1983 கலவரம் வரை என் கைவசம் தானிருந்தது. 83 கலவரத்தில் தான் என் உடமைகளுடன் கொழும்பில் தவற விட்டு விட்டேன்.

சுதந்திரனைவிட அந்தனிசீலின் தீப்பொறியின் அடுக்குமொழியழகு அந்த வயசில் என்னைக் கவர்ந்த இன்னுமொரு விடயம். 'தீப்பொறி' இதழொன்றின் தலைப்பு வசனம் கூட இன்னமும் ஞாபகத்தில் அப்படியே பசுமையாகப் பதிந்து போய்க் கிடக்கின்றது. 'ஈரிய கொல்லை தராதே நீ தொல்லை' இதுதான் அந்த வசனம்.

தமிழ்ச் சிங்களப் பிரச்சினை பற்றி, தமிழர்க்கெதிரான கலவரங்கள் பற்றிய தகவல்களை முதன்முறையாக அறியும் வாய்ப்பை இவற்றால் நான் பெற்றேன். இவையெல்லாம் சுமணதாஸ பாசுடனான எங்களது உறவின் நெருக்கத்தை தளர்த்தினவா? இல்லை என்று தான் கூறவேண்டும். சிங்கள அரசின்மேல், அப்பாவித் தமிழர்கள் மேல் காடைத்தனம் புரிந்த சிங்களக் குண்டர்களை மனம் வெறுத்தது, சபித்தது. ஆனால் சாதாரணச் சிங்கள மக்களை அப்பாவி மக்களை அந்த வயசில் கூட என்னால் வெறுக்க முடியவில்லை. அந்த வயசிலேயே நன்மைக்கும் தீமைக்குமிடையிலான வேறுபாடுகளை இனம்பிரித்துக் காண்பதில் எனக்குக் கஷ்டமேதுமிருக்கவில்லை. சுமணதாஸ் பாசின் மேல் எந்தவித வெறுப்போ, ஆத்திரமோ எனக்கு ஏற்படவில்லை. அவர் ஒரு சிங்களவர் என்ற விடயமே எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் எந்தவிதத்திலும் எங்களிற்கும், சுமணதாஸ பாஸ் குடும்பத்தவர்க்கும் இடையிலான தொடர்பில் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தி விடவில்லை. சிங்கள இனவெறி அரசின் அடக்குமுறைகளை வெறுத்த மனதால் சாதாரண சிங்களவர்களை வெறுக்க முடியவில்லை.

தொடரும்


## வெளியீட்டு விழா
## புன்னகை மலர்
## மாத சஞ்சிகை

இடம் UNIVERSITY OF TORONTO
SCARBOROUGH CAMPUS
ROOM # H 216
(MORNING SIDE/ ELLESMERE)
காலம் 09.10.1993 சனிக்கிழமை
மாலை 6.00 மணி
தலைமை: திரு எஸ் திருச்செல்வம்
(பிரதம ஆசிரியர் 'தமிழர்தகவல்)
சிறப்பு நிகழ்ச்சி
"இமேஜ்" சரா லோகநாதன்
கொம்பியூட்டர் மூலமான பின்னணி
இசையோடு வழங்கும் மெல்லிசை
அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.
மேலதிக விபரங்கட்கு
(416) 283 4375/284 2715



## சம உரிமை வேலை வாய்ப்பு
## மசோதா 79
## (Bill 79) பற்றிய
## கருத்தரங்கு

ஒன்ராறியோ மாகாண அரசு சமஉரிமை
வேலைவாய்ப்புச் சட்டம்
சிறுபான்மையினரான எங்களுக்கு
எப்படி தொழில் வாய்ப்புகளை அதிகரிக்க
உதவும் என்பது பற்றிய கருத்தரங்கு
ஐப்பசி 2ம் திகதி 1993, பிற்பகல் 2
மணிக்கு வோபர்ண் கல்லூரி, 2222
எல்ஸ்மெயர் வீதி ஸ்காபரோவில்
நடத்தப்படவுள்ளது. இதில் குடியுரிமை
அமைச்சர் மாண்புமிகு எலெயின்
சியம்பாவும் அமைச்சின் பிரதிநிதிகளும்
மற்றும் இத்துறையில் விசேடத்துவம்
பெற்ற பலரும் கலந்து கொள்வார்கள்.
இலங்கைப் பட்டதாரிகள் சங்கம், கனடா
தொடர்புகட்கு: 724 0654, 491 8203,
4961 736

# தண்ணீர்த் தொட்டி

## மா. பாலசிங்கம்



(60 களிலிருந்து எழுதி வரும் மா.பாலசிங்கம் புகலிட வாசகர்கட்குப் புதிதாக அறிமுகம் செய்யப்பட வேண்டிய ஒரு தரமான எழுத்தாளராவார். கூர்மையான சமூகப்பார்வையும், அழகியல் சிந்தனையும் கொண்ட சிறுகதை வடிவத்திலேயே தனது கவனத்தை முழுக்க முழுக்க குவித்தவர். இலங்கைப் பத்திரிகைகளில் இவரது 60க்கு மேற்பட்ட சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. சில தொடர் நாவல்களை எழுதியுள்ளார். ஆனால், இதுவரை எந்த ஒரு தொகுப்பும் புத்தகமாக வெளிவரவில்லை. இலங்கை வானொலியில் பல சிறுவர் நாடகங்கள், சித்திரங்கள் பெரியோர் நாடகங்கள், சிறுகதைகள் என்பனவற்றையும் எழுதியுள்ளார். வாசகர் சுவைப்பிற்காக, சில ஆண்டுகளின் முன்னே இவர் "மல்லிகை" யிலே எழுதிய "தண்ணீர்த்தொட்டி" என்ற சிறுகதை இங்கே நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.)

'உந்த அலுவலுக்கு நீங்கதான் தோது... ஆற்றை சொல்லையும் சனம் கேக்காது'

ஊர்ப் பிரமுகர்கள் தேன் சொரிய, பால் சொரியப் பேசிப் பென்னம் பெரிய வேண்டுகோளொன்றை விடுத்துச் சென்று விட்டனர். சாய்மனைக் கதிரையில் கிடந்து, தில்லையம்பலம் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருக்கிறான்! விடுத்திருக்கும் அன்பான வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளுவதா அன்றேல் கை கழுவுவதா இந்த பிரச்சனைதான் அவனது மனப் போராட்டத்திற்குக் காரணம். மொழிப் பிரச்சனை போல அவ் வேண்டுகோள் அவனைத் திக்குமுக்காட வைக்கிறது.

ஊர்ப் பெரிய மனிசரைக் காய்வெட்டுவதா.....

'கஷ்டப்பட்டாலும், கூழுக்குக் கஞ்சிக்கு இல்லாததுகளுக்கு உதவினால் நல்லது. கண்டவையிட்டையும் குடுத்தாச் சுருட்டிக் கொண்டு போயிடுவினம், அதுதான் இதை என் தலையில் கட்டினவை."

தில்லையம்பலத்தின் மனம் கனிகின்றது. பொதுப் பணியென்றால் முன்னுக்கு நின்று முடிச்சை அவிழ்த்துவிடுபவன் அவன். இன்னமும் அந்த விலாசம் ஊருக்குள் நிலவுகின்றது. தனது வீட்டு முற்றத்தை அவன் ஏறிட்டுப் பார்க்கிறான். முற்றத்தில் புழுதி பறக்கிறது. கொழுத்தும் வெயில் அவன் பார்வையை மழுங்கச் செய்கிறது.

'இஞ்சேரும்.......' குரல் உரத்து ஒலிக்கிறது.

'இப்பதான் தேசிக்காய் கரைக்கிறன்... கொஞ்சம் பொறுங்க' மனைவியின் உத்தரவை ஏற்று நிமிர்ந்தவன் மீண்டும் சாய்மனையில் சாய்கிறான்.

குழப்ப நிலையில் இருந்த அவனுக்கு நல்லதோர் தீர்வு பிறந்துவிட்டதென்ற களிப்பு!

'இந்தாங்க'..... அலுமினிய லோட்டா நிறையத் தேசிக்காய் ரசத்தை மனைவி சற்குணவதி நீட்டுகிறாள். அவன் வாங்கிக் கொள்கிறான்.

'அந்த வேட்டியைக் கொஞ்சம் கொண்டு வா'......

குமையும் அகத்தை முகத்தில் நிழலாடவிட்டு, கணவனைச் சற்குணவதி நோக்குகிறாள். அவள் நின்ற இடத்தை விட்டு அகலவில்லை.

'நான் என்ன சொன்னநான்' அலுமினிய லோட்டாவைக் கீழே வைத்தபடி தில்லையம்பலம் கடுகடுக்கிறான்.

'இந்த வெயிலுக்கை எங்க வெளிக்கிடப் போறியள்" கணவனின் பேச்சை விளங்காதவள் போல நடித்துக் கொண்டு, சற்குணவதி அறையை நோக்கிச் செல்கிறாள்.

'நல்ல காரியமெண்டாலும் சரி, கெட்ட காரியமெண்டாலும் சரி எப்பவும் இவளுக்கு இந்தக் கேள்விதான்' தில்லையம்பலம் புறுபுறுத்துக் கொண்டு நேரத்தைக் கடத்துகிறான்.

'போம் குடுத்து முடிஞ்சிது, இப்ப வரட்சி நிவாரணம் வந்திருக்கு. ஊருக்க கதைச்ச கதை தெரியுந்தானே' வேட்டியையும் சால்வையையும் கணவனிடம் கொடுத்தபடி சற்குணவதி முறையிடுகிறாள்.

'ரேப்பில பதிச்ச மாதிரி, அதுகள் இன்னும் என்னத்தைத் தான் கதைக்க மாட்டினம்... நான் உள்ளிட்டா நறுக்கா நிப்பன். அந்தக் காமகாரந்தான்' எழுந்து நின்று தில்லையம்பலம் சாரத்தை அவிழ்க்கிறான்.

'இஞ்ச வந்து தலைக்குத்து, மண்டைக் குத்தெண்டு நிக்கக்கூடாது'.

'உந்த வெய்யில் தலைக்குத்தை, மண்டைக் குத்தையா குடுக்கும்? ஆளை ஈயம் மாதிரி உருக்கிப்பபோடும்'.

'ஊர் அலுவெலாண்டா உங்களை நெருப்பில வைச்சுக் காய்ச்சினாலும் தெரியாதே'

களைந்து கிழே கிடந்த சாரத்தைச் சற்குணவதி எடுத்துக் கொள்கிறாள்.

தில்லையம்பலத்தின் நிவாரண யாத்திரை தொடங்கிவிட்டது முற்றத்தில் இறங்கிவிட்டான். வெந்து போயிருந்த தரை அவன் பாதத்தை கொதிக்கச் செய்கிறது. பாதங்களை நிமிர்த்திக் குதிகளால் நடக்கிறான்.

"செருப்பைக் கொழுவிக் கொண்டு போங்களன்'

'அறுந்தெல்லே போச்சு'... தில்லையம்பலம் சலிப்போடு கூறுகிறான்.

'ஒரு செருப்பு வாங்க எங்களிட்ட வக்கில்லை. ஊர் முழுக்க நிவாரணக் காசில சுதி பண்ணுதுகள்'

'உன்னை ஆரு உத்தியோகத்தனை முடிக்கச் சொன்னது'

கிழுவை மரத்தில் சாத்தி நின்ற

சைக்கிளை எடுத்துக் கொண்டு தில்லையம்பலம் படலையை நோக்கி நடக்கிறான்.

'ஆகவும் கடும்புடி புடிச்சு ஊருக்க பகையைக் கட்டாம.... இந்த முறை எல்லோரையும் சேர்த்துப் போடுங்க' தெருவோரத்தில் நின்றுகொண்டு சற்குணவதி கணவனுக்கு ஆலோசனை கூறுகிறாள்.

கண்ணைக் கூச வைக்கும் வெயில்! கதிரவன் பயங்கரவாதியாக இயங்கிக் கொண்டிருக்கிறான். தில்லையம்பலத்தின் வெறும் மேனி தீக் குளிக்கின்றது. குழிகள் விழுந்துள்ள பாதையில் நிதானத்தை இழக்காமல் சைக்கிளை ஓட்டுகிறான். கிழக்கூரை நோக்கி சைக்கிள் போய்க் கொண்டிருக்கிறது.

தான் பொறுப்பேற்ற பணியை எப்படியாவது சூற்றம், வேண்டுமென்று அவன் தனக்குள் கங்கணம் கட்டுகிறான். சற்குணவதி சொன்னவைகள் அவன் மனதைப் பிய்த்துச் குத்துகின்றன. அவள் சொன்னவைகள் பாதிக்குமேல் உண்மைதான் ஊதியமற்ற பணி! தன்னைப் போன்றவர்கள் ஒதுங்கிக் கொண்டால் முழுச் கிராமமுமே பாதிப்பிற்கு உள்ளாகும்! அதைக் கண்டு நெகிழப் போவதும் தானேதான்! தில்லையம்பலம் .. மீண்டுமொரு முறை சபலங்களிலிருந்து விடுபடுகிறான்.

அவன் புளியடிச் சந்திக்கு வந்துவிட்டான். இன்னும் கொஞ்ச தூரந்தான். முதல் தரிப்பு நெருங்கிவிட்டது. சைக்கிள் சின்னமணி வீட்டுக் கேற்றிற்கு முன் நிற்கிறது. தலைப்பாகையைக் குலைத்து முகத்தில் வழிந்து கொண்டிருக்கும் வியர்வையைத் துடைக்கிறான். சைக்கிள் மணி ஒசை கேட்டு சின்னமணி கேற்றடிக்கு விரைந்த வருகிறான்.

'நிப்பியளோ எண்டு யோசிச்சன். ...'

'இந்தக் காண்டியத்துக்க எங்க போறது. வீட்டுக்கத்தான் இருக்க முடியுதா? மரங்களுக்குக் கீழதான் இப்ப எங்கட நடமாட்டம்' தில்லையம்பலத்திற்குச் செங்கம்பள வரவேற்பு.

'உங்களையெல்லாம் உப்புடி வீட்டுகளுக்கு அடைஞ்சு கிடக்காமச் செய்யத்தான் இப்ப ஒரு புது வேலை வந்திருக்கு. நான் இப்ப வந்தது அதுக்குத்தான்'

சின்னமணியின் முகத்தைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு தில்லையம்பலம் கதிரையில் அமர்கிறான்.

"உம்மட எந்த அலுவலுக்குக் காணும் நான் பின்னடிச்சனான்' மேகங்கள் கலைந்து விட்டன. வந்த அலுவலில் மூன்றில் இரண்டு முடிந்து விட்டது போன்ற ஆறுதல்.

'மணியின்ர குணம் எனக்கா தெரியாது'

தான் அறிவிக்க வந்த விஷயத்தை தில்லையம்பலம் ஒவ்வொன்றாகப் பிய்த்துப் பிய்த்துப் விளக்குகிறான். அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் தன் தலையை ஆட்டி ஆட்டிச் சின்னமணி தன் உடன்பாட்டை அறிவிக்கிறான்.

'இந்த ஊருக்கு உந்த வரட்சி நிவாரணத்தை நிரந்தரமாக்கிப் போட்டாலும் நல்லது தில்லை... இல்லையே! சொல்லு பாப்பம், எந்த வருசந்தான் இஞ்ச மழை ஒழுங்காகப் பெஞ்சிருக்கு? குடிக்கத் தண்ணி இல்லாமல் மிருக சாதியெல்லாம் ரோட்டு ரோட்டாகச் செத்துக்கிடக்கப்போகுது'

'என்ன, தண்ணி கிண்ணி குடிக்காமலோ? அதுவும் வெளியால போட்டா...."

'நான் குடிச்சுப் போட்டுத்தான் வந்தநான்' வீட்டுப் படிக்கட்டை விட்டு தில்லையம்பலம் தரைக்கு இறங்கினான்.

'இனி எந்தப் படலையைத் திறக்கப் போறீர்' பிரியாவிடை கொடுக்கும் பாணியில் வீட்டு வாசலில் நின்று கொண்டு சின்னமணி கேட்டான்.

'இதுக்க ஜே.பி.யையும் இழுக்கப் போறன்'

தன் அடுத்த வீட்டுக்காரரைத்தான் குறிக்கப்படுகிறதென்பதைக் கருதி சுத்தமாக அறிந்து கொண்டான். தில்லையம்பலம் கேற்றை நோக்கி நடந்தாள்.

சைக்கிளை உருட்டியபடியே தில்லையம்பலம் ரோட்டிற்கு மிதிக்கிறான். பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் சின்னமணியின் வீட்டுமதில் ஓரமாக நிற்கின்றன. சின்னமணியின் காணிக்குள் நிற்கும் உயர்ந்த தருக்கள் அம்மாடுகளுக்குக் குடை பிடிப்பது போல் நிழல் கொடுக்கின்றன. வெயிலின் வெம்மையே மறக்கத் தில்லையம்பலத்திற்கு அக்காட்சி கைகொடுக்கிறது. சைக்கிள் உருண்டு முன்னேறுகிறது. சின்னமணியின் கிணற்றடிக்கு முன்பாகத் தெருவோரத்தில் தொட்டியொன்று தெரிகிறது. அதைச் சுற்றி நின்று மாடுகள் அதற்குள்ளிருக்கும் நீரைக் குடிக்கின்றன.

'தில்லை தொட்டீக்க தண்ணி கிடக்கா?' நிற்பதைத் தில்லையம்பலம் கண்டு கொள்கிறான்.

துலாக் கயிற்றைப் பிடித்தபடி, சின்னமணி நிற்பதைத் தில்லையம்பலம் கண்டு கொள்கிறான்.

'இவ்வளவு மாடுகளும் குடிக்க உந்தத் தொட்டித் தண்ணி காணுமா? சின்னமணி'

'காசு வரட்டும் பெரிய தொட்டி கட்டப்போறன்' ஆனந்த ஆரவாரத்தோடு சின்ன மணி உரத்துக் கத்துகிறான். நீர் பீலி மூலமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறது. வாலை ஆட்டி ஆட்டி மாடுகள் நீரைக் குடிக்கின்றன.

தன்னைக் கேற்வரை வந்து சின்னமணி வழி அனுப்பாததற்கான காரணத்தைத் தில்லையம்பலம் உணர்ந்து கொள்கிறான்.

சுற்றுமதில் குண்டுகள் துளைத்தது. போன்ற குழிகள்! வயிறு குளிர்ந்த மாடுகள் தங்கள் கொம்புகளால் சுற்று மதிலை முட்டிப் பார்த்திருக்கின்றன என்ற உண்மையைத் தில்லையம்பலம் இரச்சிக்கிறான். அது மட்டுமா! சுற்று மதில் அங்குமிங்கும் சாணி பூசப்பட்டிருந்தது. மாடுகளின் இத் திருவிளையாடல்களைக் கண்டும் சின்னமணி இன்னமும் தொட்டிக்குள் நீர் நிறைக்கிறான்! தில்லையம்பலத்திற்கு வியப்பாக இருக்கின்றது. நண்பனின் இதயம் ஆழ்ந்த சாகரம்.

'இந்தக் தொட்டியை எப்ப சின்னமணி கட்டினவன்! ஒரு வார்த்தைகூட எனக்குச் சொல்லவில்லையே' மனம் திறந்து பேசும் நண்பன் இப்படியான நல்ல காரியத்தைத் தான் செய்தது குறித்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே என்ற ஆதங்கம் தில்லையம்பலத்தின் நெஞ்சை அடைக்கிறது.

'புகழை விரும்பாதவன்.... நசுக்கிடாமல் இரகசிய நடவடிக்கை எடுத்ததன் காரணம் இதுவேயெனத் தில்லையம்பலம் தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறான்.

உருண்டு கொண்டிருந்த சைக்கிள் ஜே.பியின் கேற்றை அடைந்த விட்டது.

சுற்று மதிலில் பொருத்தப்பட்டிருந்த பிளாஸ்ரிக் எழுத்துக்கள் வீட்டுச் சொந்தக்காரர் என். வடிவேலு, ஜே.பி. எனக் கட்டியங் கூறுகின்றன. தில்லையம்பலம் சைக்கிள்

மணியை ஒலிக்கிறான். நாயொன்று தானும அங்கிருப்பதைக் குரைத்து அம்பலப்படுத்துகிறது.

'ஆரது....' நாய் போடும் சத்தத்தை உதைத்துக் கொண்டு பெண்ணொருத்தியின் குரல் தில்லையம்பலத்தின் செவிகளுள் புகுகின்றது. தன்னை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.. அவன் மௌனித்துக் கொள்கிறான். ஜே.பியின் மனைவி அம்மன் சிலைபோல் அவனை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள்.

'ஜே.பி. இருக்கிறாரே!

'ஓம் வாருங்க' மனக் சிலேசம் எதுவுமின்றி ஜே.பி.யின் மனைவி கேற்றைத் திறக்கிறாள்.

'சனம் அவரைச் சும்மாவா இருக்க விடுது. அடிக்கொருதரம் சத்தியக் கடுதாசியெண்டு வருகுதுகள்' மொலு, மொலுவென அவள் சினந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

'இப்பதானே அந்த நிவாரணம், இந்த நிவாரணமெண்டு அறிவிச்சுக் கொண்டிருக்கினம். சனத்துக்கு எல்லா நிவாரணத்தையும் எடுக்க வேண்டுமென்ற நோக்கம் அதுதான் ஜேபியிட்ட சத்தியக் கடுதாசிக்கு கியூவில் நிற்குதுகள்'

ஜே.பி.யின் மனைவி குசினிப் பக்கம் போகிறாள். கூச்சமற்றவனாகத் தில்லையம்பலம் முன் முற்றத்திற்குச் சைக்கிளை உருட்டுகின்றான். கமுக மரமொன்றின் கீழ் சைக்கிளைச் சரித்து வைக்கிறான்.

'தில்லையம்பலமோ........வாரும் வாரும்' விறுந்தையில் நின்று கொண்டு ஜேபி வரவேற்கிறார்.

குசன் செற்றியில் இருவரும் சமனாக அமருகின்றனர். மின்னல் வேகத்தில் எதிர்பாராது ஜே.பி எழுந்து எதிரில் இருந்த செற்றியில் குந்துகிறார்.

'முகத்தைப் பார்த்துக் கதைக்க வேணும்' தனது செய்கைக்கான விளக்கத்தை ஜேபி ஒப்புவிக்கிறார்.

'இந்த வெய்யிலுக்க எங்கதான் ஜே.பி போறது...'

'இப்ப என்னவும் மழையிக்காலயா வந்திருக்கிறீர்' நகைச் சுவையாகப் பேசிவிட்டதைப் போல ஜேபி அட்டகாசமாச் சிரிக்கிறார்.

'தள்ளிப் போட ஏலாத காரியம் ஜே.பி. அதுதான் வெய்யிலைப் பாராம வந்தனான்....' ஜேபியின் தவிப்பை முடுக்கிவிட வேண்டுமென்ற தந்திரத்தோடு தில்லையம்பலம் தனது பயணத்தின் நோக்கத்தைத் தொடர்ந்தான்.

'அப்படி என்னப்பா விஷயம்' ஜே.பிக்கு ஆறப் பொறுக்க முடியதா ஏக்கம்! வந்தவன் என்னத்தைச் சொல்லப் போகிறானென்ற மனத் தவிப்பு,

தில்லையம்பலத்தின் கசெற் ஓடிக்கொண்டிருந்தது. மக்களுக்குத் தொண்டு செய்ய இதைவிட அரிய சந்தர்ப்பம் கிடைக்காதென ஜே.பி தனக்குள் எண்ணிக் கொண்டார்.

'உது கட்டாயம் செய்ய வேண்டிய அலுவல்தான், மாடுகளுக்கு நோயெண்டு இறைச்சி விக்கவும் தடை போட்டிருக்கு. இன்னும் கொஞ்ச நாளையில் நாயளுக்கும் விசர் புடிச்சு ஆக்களுக்குக் கடிச்சு, ஆக்களுக்கும் விசர் வரப் போகுது. அது சரி நிவாரணக் குழுவில் மற்ற ஆக்கள் ஆர்'

ஜே பியின் கண்கள் தில்லையம்பலத்தில் மொய்த்தன.

நீங்களொண்டு, நானொண்டு சின்னமணியையும் போட்டிருக்கிறன் அவர் எங்களோட போம் குடுக்க வந்தவர்'

சடாரென ஜேபி முகத்தைச் கவிழ்த்துக் கொாண்டார்.

'என்னோட ஜேபிக்குப் போட்டிபோட வெளிக்கிட்டவர்' இரு கைகளையும் முழங்கால்களுக்குக்குள் இடுக்கிக் கொண்டு ஜேபி சொன்னார். அவரது முக முத்திரைகளை அவதானிக்கத் தில்லையம்பலம் துடித்தான், அவன் கண்கள் துருதுருத்தன!

'அதெல்லாம் போன கதை விட்டுப் போடுங்க, இப்ப எவ்வளவு காலமாப் போச்சு' ஜே பியைச் சாந்தப் படுத்தத் தில்லையம்பலம் முனைந்தான். தன் முழுத் திறமையையும் பாவித்து ஜேபியின் வைராக்கியத்தை ஒட்டு மொத்தமாகப் போக்க வேண்டுமென்ற முனைப்போடு தில்லையம்பலம் இயங்கினான்.

உரையாடல் தொடராமல் காலம் கரைந்தது.

'சின்னமணியைப் பற்றி யோசிக்காதயுங்க, குழுவுக்கு நீங்கதான் தலைவர். எது எப்பிடி இருந்தாலும் நாங்கள் சனத்துக்குச் செய்யிறதைச் செய்யத் தான் வேணும்'

செருமிக் கொண்டு ஜே.பி குனிந்த தலையை நிமிர்த்தினார். தில்லையம்பலத்திற்குப் பழத்தைப் பறித்து விட்ட மகிழ்ச்சி. எழுந்து இருவரும் வெளியே வந்தனர். சைக்கிளை எடுத்துக் கொண்டு ஜேபி சகிதம் தில்லையம்பலம் கேற்றை நோக்கி நடக்கிறான்.

'நாங்கள் வாசிகசாலையிலதான் சந்திக்க வேணும். எப்ப வெண்டு சொல்லியனுப்புறன்'

புறப்பட்ட ஆயத்தமாகத் தில்லையம்பலம் தெருவோரத்தில் நின்றான். தொட்டியில் நீர் குடித்துக் கொண்டு நின்ற மாடுகள் வால்களை உயரத் தூக்கி ஆட்டிக் கொண்டு நகர ஆரம்பிக்கின்றன. நடந்து கொண்டே அவைகள் தெருவில் சாணத்தைக் கழத்துச் செல்கின்றன.

'கண்டீரே.. எந்தப் பேயன் சின்னமணி ஒரு தொட்டியைக் கட்டிவிட்டு, தண்ணியைக் குடிச்சுக் குடிச்சு மாடுகளுக்கெல்லாம் பீச்சல் விசாதி புடிட்சிட்டுது'

தொட்டியை எரிப்பதபோல் பார்த்துக் கொண்டு ஜே பி என்னமாகக் கூறுகிறார். அந்தப் பேச்சைப் பொருட்படுத்தாதவன் போல் தில்லையம்பலம் சைக்கிள் பெடலில் பாதத்தை வைத்தான்.

'உந்தத் தொட்டியை உடைக்கச் சொல்லி எல்லாருமாச் சேர்ந்து கொமிசனருக்கு பெட்டிசம் எழுதினா என்ன' மிகவும் நெருங்கி வந்து ஜே.பி சொன்னது தில்லையம்பலத்தின் நெஞ்சில் பட்டது.

சற்றுமுன் வரட்சியைக் குறித்து ஜேபி சொன்னவைகளை தில்லையம்பலம் மீட்டுப பார்க்கிறான். இந்தத் தொட்டியை உடைத்தால், இந்த மிருகசாதிகளின் வயிற்றில் வரட்சி குடி கொள்ளுமே.... இந்த உணர்வு ஜே.பிக்குப் பிறக்கவில்லையே....... சின்னமணி போட்டிக்கு வந்ததிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? எறிக்கும் வெயிலில் தில்லையம்பலம் நிற்பதா போவதாவெனத் திணறிக் கொண்டு நின்றான். ஜேபியின் உள்ளத்து வரட்சிக்கு எங்குதான் நிவாரணம் தேடுவது பெடலை ஊன்றி மிதித்துச் சைக்கிளில் ஏறிக் கொள்கிறான். ஜே பிக்கு அப்பால நகர்ந்து விட்டதென்ற குளிர்ச்சி அவன் மேனியில் சில்லிட்டது!

'வடிவேலு ஜே பி போன்றோரின் தலைமையின் கீழ் சின்னமணி போன்றோரைப் பணியாற்ற வைப்பது தகுமா'?

நியாயத் தீர்வொன்றின் தேடலில் அவன் மனம் இலயித்துக் கொண்டது. நியாயம் பெரிய மனிதர் சிலருக்கு மட்டும் சொந்தமானதல்ல. நியாயத்தின் பொதுமை அவன் நெஞ்சில் நங்கூரம் பதித்தது அவன் திசை மாறும் பறவையல்ல...

. பெருங்கவிக்கோ...
இலக்கியத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கின்றீர்களா?"

பெருங்கவிக்கோ: "நிச்சயமாக தமிழனுக்கு தெரிந்ததெல்லாம் தமிழுக்கும் வரவேண்டும். அவ்வாருன பல ஆக்கங்கள் தமிழ்நாட்டில் இப்போது ஏராளமாக வந்த கொண்டிருக்கிறது. எனது "காலக்கனி" என்ற காப்பியத்தில் இதை கருத்தில் கொண்டிருக்கிறேன். அறிவியல் என்பது முடிவிலி. அதன் ஒவ்வொரு வளர்ச்சியும் தமிழுக்கு தர படைப்பாளிகள் முன்வர வேண்டும்.

நான்: "உங்கள் கவிதை ஒன்றில்
"நானோர் தமிழ் வெறியன்
இந்த நாட்டை
நாய் கழுதை ஆண்டாலும் கவலையில்லை" என எழுதியுள்ளீர்கள். மொழி உணர்வு அவசியம். மொழி வெறி தேவைதானு? மொழி மதங்களில் இவ்வாருன வெறித்தன்மை அளிக்கப்படுவதால் எத்தனையோ உயிரிழப்புகள் ஏற்படுவதை நீங்கள் உணரவில்லையா?"

பெருங்கவிக்கோ: "ஆள்பவன் யார் என்பதிலும் ஆட்சி மொழி தமிழாய் இருப்பதே எனது குறிக்கோள் என்பதைக் காட்டவே அவ்வாறு எழுதினேன். உணர்வு வெறியாவதும் வெறி உணர்வாவதும் அவரவர் இயல்புகளில் தங்கியுள்ளது. மொழி உணர்வே அற்றிருப்பவர்களுக்கு உணர்த்த எழுத்தோட்டம் சற்று மிகையாகும் போது அது வெறியூட்டுவது போல தென்படுவது ஒரு பிரமையே. ஆனுல் இவையெல்லாம் மொழி வெறியூட்டுவன என்ருல் ஏற்கனவே வந்த எத்தனையோ இலக்கியங்களைப் படித்தவர்கள் தமிழுக்கு ஒரு நாட்டை எப்போதோ வென்றெடுத்திருப்பார்கள்.


நான்: "ஈழத்து இலக்கியங்களுக்கு தமிழ்நாட்டில் இலக்கிய வாதிகளுக்காவது ஈடுபாடு உண்டா? பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை எனச் சொல்லப்படுகிறதே தரம் குறைவென்று கருதப்படுகிறதா?"

பெருங்கவிக்கோ: "நடிகையின் நாயைப்பற்றி எழுத பக்கங்களை ஒதுக்கும் பத்திரிகைகள் கவிதைகளுக்கு ஒரு மூலையைக்கூட ஒதுக்க தயங்குகின்றன. பத்திரிகைப்பலம் பெற்ற எழுத்தாளர்கள் எதை எழுதினுலும் அதுதான் இலக்கியம் என கருதி பிரசுரிக்கும் போக்கு தமிழ் நாட்டு பத்திரிகைகளில் காணப்படுகிறது. தமிழ் நாட்டில் உள்ள எத்தனையோ இலக்கியவாதிகளின் ஆக்கங்கள் இந்தப் பத்திரிகைகளால் காலம் காலமாக அலட்சியம் செய்யப்பட்டே வருகிறது. இக்கதி ஈழத்து எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல. பத்திரிகைப் பலம் பெருத எல்லா எழுத்தாளர்களுக்குமே. மற்றபடி ஈழத்திலக்கியங்கள் ஒன்றும் சளைத்தவை அல்ல. புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களுக்கு நூல்களை வெளியிடும் வாய்ப்பும் வசதியும் இருப்பதால் திறமை ஒருநாள் வெளிப்பட்டே தீரும்.

நான்: "இலக்கியப் பணியோடு நின்றுவிடாமல் தமிழின உணர்வுடன் பல போராட்டங்களையும் முன்னின்று நடத்தியிருக்கிறீர்கள். ஈழத்தமிழர்களுக்காக நீங்கள் தோள் கொடுப்பதுவும் அதனுல் எத்தனையோ இன்னல்களை அனுபவித்ததுவும் இலங்கைத்தமிழர் பிரச்சனையை கௌதமரின் கண்ணீர் என்ற நாட்டிய நாடக மூலம் உலகு உணரச்செய்ததுவும் பலரும் அறிந்ததே. இலங்கைத் தமிழர் போராட்டம் பற்றி தற்போது தங்கள் அபிப்பிராயம் என்ன?"

பெருங்கவிக்கோ: "இலங்கைத் தமிழன் இந்தியத் தமிழன் என ஏன் பாகுபடுத்துகிறீர்கள். தமிழ் வளர வேண்டுமானுல், தமிழன் வளரவேண்டுமானுல் அவனுக்கு நாடு வேண்டும். இது இன்று எல்லோராலும் உணரப்பட்ட ஒன்று. அந்த நோக்கத்துடன் எவர் இருப்பினும் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பது அவசியம் எனக் கருதுகிறேன். ஈழத்தில் இன எழுச்சி சோரவிடப் பட்டால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வருமா?"

தமிழைப் பற்றியும் தமிழின வளர்ச்சி பற்றியும் போசனத்தையும் மறந்து அவர் பேசிக்கொண்டே இருந்தார். அந்த சில மணித்துளிகளின் தாக்கமாக. .... "தமிழுக்கு நீ என்ன செய்தாய்" என்று மீண்டும் மீண்டும் என் மனத்தைக் குத்திக்கொண்டே இருக்கிறது.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

### 1983 ஜூலையில் ஜேவிபியை தடைசெய்தலும் தடைக்குப் பின்னர் செயல்முறைகளும்

ஜேவிபி வன்செயல்களில் ஈடுபடவுள்ளது (ஜேவிபி 1971ல் கிளர்ச்சி செய்த காரணத்தால் ஜேவிபிக்கு எதிரான இக்குற்றச் சாட்டை நம்பக்கூடிய விதத்தில் சுமத்துவதற்கான வாய்ப்பும் இருந்தது) எனக் கூறிக்கொண்டு ஜேவிபி நாட்டை பிளவுபடுத்த செயல் படுகிறது, வடக்கின் பயங்கரவாதிகளுக்கு உதவி அளிக்கின்றது என்பனவற்றைக் கூறி தெற்கில் அடக்கு முறையை செயல்படுத்துவதற்கான காரணங்களை சிருஷ்டிப்பதேயாகும். தெற்கில் பயங்கரவாத இயக்கம் இருப்பதால் அவசரகாலச் சட்டம், பயஙகரவாத தடைச் சட்டத்தையும் அமுல்படுத்த வேண்டியது அவசியம் என நம்ப வைக்கவேண்டியதும் அரசாங்கத்தின் தேவையாகும். இவ் அடக்கு முறைச் சட்டங்களை அமுல் படுத்தினால் தமக்கு எதிராக வெடித்துக் கிளம்பும் மக்களின் எதிர்ப்பை அடக்குவது இலகுவானது.

உண்மையிலேயே ஜூலை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக்கூறி ஜேவிபி உட்பட மூன்று கட்சிகளைத் தடைசெய்ததும் ஜேவிபி மீதான தடையை நீடித்ததும் அரசாங்கத்தின் சதியேயாகும். ஆட்சித் தலைவர்களும் பொலீஸ் சேவையின் உயர்மட்ட உத்தியோகத்தர்களுமே இச்சதியின் பங்காளிகள். மீண்டும் வன்முறைகளில் ஈடுபடவேண்டும் என ஜேவிபியினர் சும்மாகூட எண்ணியிருக்காத காலகட்டத்திலேயே தான் அரசாங்கம் ஜேவிபி மீது தடை விதித்தது தடை செய்ததன் மூலமும் தடையை நீடித்ததன் மூலமும் மீண்டும் வன்முறையை நோக்கி ஜேவிபியை இழுத்துத் தள்ளியது அரசாங்கமேயாகும்.

லயனல் போபகே, சோமரத்ன களுஆராச்சி உட்பட கைது செய்யப்பட்ட ஜேவிபி இயங்குனர்கள், அங்கத்தவர்கள் 1983 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். லயனல் போபகே விடுதலை செய்யப்பட்ட பின்னர் ஷெல்டனும் ஜீவாவும் இவரைச் சந்தித்து அரசியல் வேலைகள் பற்றி உரையாடிய போதிலும் லயனல் போபகே இதுபற்றி அவ்வளவு, தூரம் ஆர்வம் காண்பிக்கவில்லை. ஆனாலும் அவருடன் உரையாடி சில வேலைகள் பொறுப்பளிக்கப்பட்டன. எனினும் இப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் லயனல் போபகே அக்கறை செலுத்தவில்லை.

இக்காலகட்டத்தில் கட்சியின் செயல்முறைகள் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு கட்சித் தலைமை கையாண்ட வழி முறைகள் பற்றி லயனல் போபகே பெரும் விரக்திக்குள்ளாகியிருந்தார் அத்துடன் புத்தல என்னும் இடத்தில் நடைபெற்ற உரையாடலின் பின்னர் கட்சித் தலைமை அவர் தொடர்பாக செயல்பட ஆரம்பித்த முறையும் இவருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 1984 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பத்தில் தான் கட்சியின் செயலாளருக்குரிய வேலைகளைக் கைவிடுவதாக ஷெல்டன் மூலமாக லயனல் போபகே கட்சித் தலைமைக்கு அறிவித்தார். இதனிடையே 1984 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ம் திகதி அகலவத்தை யில் ஜேவிபி யின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்றது. லயனல் போபகே இக் கூட்டத்திற்கு சமுகமளித்தார். விஜேவீர கலந்து கொள்ளவில்லை. இவ் உரையாடலின்போது தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப்பற்றி லயனல் போபகே கூறினார். அதன்பின்னர் அவரை கட்சிப் பொறுப்புகளிலிருந்து விடுவிப்பது எனவும், பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் உரையாடுவதாகவும், அப் பிரச்சினைகள் பற்றி கட்சிக்கு விளங்கப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இங்கு கட்சியை புனரமைப்பது, கட்சித் தலைமையை விரிவு படுத்துவது தொடர்பாகவும் உரையாடப்பட்டது.

### லயனல் போபகே ஜேவிபி யிலிருந்து இராஜினாமா

ஜேவிபி யின் வேலைத்திட்டம், செயல் முறைகள், மூல தந்திர உபாயங்கள் உட்கட்சி நெருக்கடிகளை தீர்பதற்கு கையாளும் அதிகாரத்துவ முறை ஆகியவற்றுக்கு எதிராக கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காததன் விளைவாக 1984 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ம் திகதி ஜேவிபியின் அரசியல் குழு, மத்திய கமிட்டி, அங்கத்தவர்களுக்கு என எழுதப்பட்ட கடிதத்தின் மூலமாக கட்சியின் சகல பதவிகளிலிருந்தும் கட்சி அங்கத்துவர் நிலையிலிருந்தும் இராஜினாமாச் செய்வதாக அறிவித்தார். அவரின் பொறுப்பிலிருந்த அவரின் பெயரிலிருந்த கட்சியின் சகல சொத்துக்களும் கோவைகளும் சுமித் அத்துகோறல எனப்படும் நந்த சிங்கவுக்கு பாரமளிக்கப்பட்டன.

இக் கடிதத்தை எழுத 1983 பெப்ரவரி மாதமளவில் தான் எண்ணியிருந்ததாகவும், அவ் இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் பலவேறு காரணங்களால் எழுதுவது தாமதமாகியது. ஜேவிபி தொடர்பான பூரணத்துவமற்ற சுயவிமர்சனம் எனக் கூறக்கூடிய இவ் இராஜினாமாக் கடிதத்தை முற்றாக ஒழிவு மறைவு எதுவுமின்றி எழுதப்பட்டது எனக் கூறமுடியாவிட்டாலும் ஜேவிபியின் குறைபாடுகள் பலவற்றை அவர் காண்பித்துள்ளார். எவ்வளவு தவறுகள் இருந்தாலும் ஜேவிபியின் அரசியல் ஒப்புநோக்கில் தவறற்றது என்னும் அடிப்படையில் இருந்து கொண்டே அவர் ஜேவிபியின் தவறுகளை விமர்சிப்பதில் தான் அவர் காட்டும் தவறுகள் மிக முக்கியமானதாக அமைகிறது. அவருடைய இராஜினாமாக் கடிதத்தில் முன்வைக்கப்படும் விமர்சனங்களின் சாராம்சம் பின்வருமாறு

ஜேவிபி யின் அரசியில் மூல தந்திர உபாயங்களைப் பொறுத்த வரையில் எவ்வளவு குறைபாடுகள் காணப்பட்டாலும் அவ் அரசியல் ஒப்பு நோக்கில் தவறற்றது. அப்படியான போதிலும் கட்சியின் தவறுகளை திருத்த முடியாது. ஏப்பிரல் கிளர்ச்சி தொடர்பாக 1971 ஏப்பிரல் 2ம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானமும் 1982 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு விஜேவீரவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என தீர்மானித்ததும் அதற்கு முன்னர் நாம் முன்னெடுத்த அரசியலின் தர்க்கரீதியான கட்டாய விளைவாகும். இவ் இரு முடிவுகளும் அரசியல் ரீதியாக பாரதூரமான தவறுகளைக் கொண்ட முடிவுகளாகும். கட்சிக்குள் தனி நபர்கள்

குறித்து பெரும் நம்பிக்கையும் பக்தியும் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் தீங்கு இழைக்கப்பட்டது. உண்மையிலேயே இழைக்கப்பட்ட தவறுகளை ஏற்றுக் கொள்ளும் நிலைமை கூட கட்சியில் இருக்கவில்லை. சுயவிமர்சனங்களின் போதும் அத்தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உண்மையிலே நிகழ்ந்தது தவறுகளைத் திருத்துவது அல்ல, அத் தவறுகள் மேலும் வளர்ந்ததேயாகும். 1977க்குப் பின்னர் முன்னெடுத்துச் செல்லப்பட்ட மிகப் பெரும் பிரசச்ார வேலைத் திட்டம் புரட்சிகர இயக்கமொன்றுக்குரிய ஸ்தாபன சுபாவத்தை சிதறடிப்பதாகவே அமைந்தது. அது சீரணிக்க முடியாத அளவுக்கு சாப்பிட்டதற்கு சமமாகும். இப் பாரிய வேலைத்திட்டம் கட்சிக்கு எண்ணிக்கை ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்திய போதிலும் குணும்ச ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஓரளவு தூரத்துக்காவது குணும்ச ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்த உதவியாகவிருந்த கல்வி வேலைத்திட்டம் கூட முற்று முழுதாக சிதைந்து போயிற்று. இதனால் நிகழ்ந்ததோ துரித கதியில் இடம் பெற்ற எண்ணிக்கை ரீதியிலான வளர்ச்சியினால் கட்சியின் ஆணிவேரே உழுத்துப்போய் கட்சியை அழிவுப் பாதையில் இட்டுச் சென்றதேயாகும்.

பிரச்சார வேலைகளின் போது காண்பிக்கப்பட்ட கவர்ச்சிகர போக்கு மூலம் கட்சி ஒட்டு மொத்தமாக சீரழிந்ததோடு அதற்குச் சமாந்தரமாக தனி நபர் சீரழிவும் ஏற்பட்டது, அவ்வாறே கவர்ச்சிகரப் போக்குடன் செய்யப்பட்ட வேலைகள் மூலமாக எதிரி ஜேவிபி யைக் கண்டு மிகை மதிப்பீடு செய்வதற்கும் வழி சமைக்கப்பட்டது. எண்ணிக்கை ரீதியாக கட்சியை வளர்ப்பதற்கு காண்பித்த போக்கானது இறுதியாக வெறும் தேர்தல் ஸ்தாபனத்தை கட்டி எழுப்பும் அர்த்தமற்ற இலக்குக்கும் நோக்கங்களுக்குமே மட்டுப் படுத்தப்பட்டது.

தொழிலாளி வர்க்கம் புரட்சியின் முன்னணிப்படை எனக் கூறப்பட்ட போதிலும் மாணவர், தொழிலற்றவாலிபர்கள் மத்தியிலே அரசியல் வேலை செய்வதற்கே கூடிய கவனம் செலுத்தப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலே தொழிற்சங்க அரசியல் வேலை மட்டுமே செய்யப்பட்டது. புத்திஜீவிகளை கட்சிக்காக வென்றெடுப்பதற்கோ புத்திஜீவிகளை கட்சியின் தீவிர ஊழியர்களாக முன்னெடுக்கவோ கட்சிக்கு எவ்வித வேலைத் திட்டமும் இருக்கவில்லை. மாணவர் மன்றங்களின் பதவிகளை கைப்பற்றுவதற்கு முயற்சிக்கப்பட்டதே தவிர புத்திஜீவிகளை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஏதுமில்லை.

தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக இரட்டைவேடம் பூணுதலே கட்சியின் கொள்கையாக விருந்தது. பாராளுமன்றவாதக் கட்சி தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக காண்பிக்கும் கொள்கையிலிருந்து எவ்விதத்திலும் வேறுபடவில்லை. இலங்கை சோஷலிசப் புரட்சியுடன் தேசிய இனப்பிரச்சனையை இணைத்து செயல்படுவது எவ்வாறு என ஆழமாகப் பரிசீலனை செய்து அதற்கமைய செயல்படுவது பற்றி கவனம் செலுத்துவதே புரட்சிகரக் கட்சியின் பிரதான பணியாக இருந்திருக்க வேண்டும். சிங்கள அல்லது தமிழ் இனவாதத்துடன் சாய்வதால் இதனைச் செய்யமுடியாது. தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள சில போராட்ட இயக்கங்கள் ஆரம்பத்தில் அவை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அவர்கள் முற்போக்கு வாதிகளாக செயல்பட தயாராகவிருப்பின் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் அவசியமாகும் அடக்குமுறைக்கு உள்ளாக நேரிடும் என எண்ணி அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளல் இலங்கைப் புரட்சிக்கு நன்மை பயக்க மாட்டாது.

யூஎன்பி விரோத மற்றும் பழைய மரபுரீதியான இடதுசாரிக் கட்சிகளுடன் உபாயரீதியாக கடைப்பிடிக்கக்கூடிய செயல் முறைகள் பற்றி கட்சிக்கு எவ்வித கருத்தும் கிடையாது. அவ்வாறான உபாய ரீதியான வேலைத்திட்டத்தை செயல்படுத்தியிருக்க வேண்டிய சகல சந்தர்ப்பங்களிலும் கட்சி அழிந்து போய்விடும் என்னும் பயத்தால் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டது. கட்சியை நோக்கி அடக்குமுறையை இலக்குப்படுத்தும் போது மட்டுமே நாம் அவர்களது உதவியையும் ஆதரவையும் நாடினோம். ஆதலால் அவர்கள் மத்தியில் எம்மைப் பற்றிய அவநம்பிக்கையும் நிச்சயமற்ற தன்மையுமே ஏற்பட்டது. உபாயரீதியான ஐக்கியம் பற்றி எமது கட்சியிடம் முதிர்ச்சியற்ற சுபாமே காணப்பட்டது. இது எம்மை குழுவாத தன்மையை நோக்கி இட்டுச் சென்றது.

உட்கட்சி பிரச்சினைகள் தோன்றிய போது அவற்றைத் தீர்ப்பதற்கு கடுமையான அதிகாரத்துவ முறையே கடைப்பிடிக்கப்பட்டது.

கட்சிக்குள் தலைமைத்துவம் பற்றிய பிரச்சினை தொடர்ந்தும் நிலவியது. 71க்கு முன்னரும் 71க்குப் பின்னரும் தொடர்ச்சியாக தலைமைத்துவ நெருக்கடி நிலவியது புரட்சிகரக் கட்சியின் தலைமைக்குரிய தன்மைகளும் குணும்சமும் எமது தலைமையிடமிருந்து மறைந்து கொண்டன. கட்சியை கரையேற்ற முடியாமல் தலைமை நெருக்கடிக்குள் மூழ்கியிருந்தது.

எதிர்காலத்தில் நாட்டில் பெரும் நெருக்கடிகள் தோன்றும் ஆனால் புரட்சிகரக் கட்சியோ புரட்சிகரத் தலைமையோ நாட்டில் இல்லை. மரபுரீதியான இடதுசாரி கட்சிகளும் புதிய இடதுசாரிக்கட்சிகளும் மிகவும் பெலவீனப்பட்டு அல்லது பெலவீனப் படுத்தப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் நிலைமைகளின் கீழ் ஜேவிபியால் அதன் தன்மை ஸ்தாபன அடித்தளத்தில் இருந்துகொண்டு நிறைவேற்ற கூடிய வரலாற்று ரீதியான அரசியல் ரீதியான பணிகள் முற்றுப் பெற்றுள்ளன.

ஜேவிபியின் தவறுகளை திருத்த முடியாது. 1971க்கு முன்னர் எம்மிடம் காணப்பட்ட அதி தீவிர இடதுசாரிப் போக்கானது 1977க்குப் பின்னர் அதிவலதுசாரி போக்காக மாற்றம் பெற்றது. அவ்வாறே இவ் அதிவலதுசாரிப் போக்கானது மீண்டும் அதிதீவிர இடதுசாரிப் போக்காக மாற்றம் பெற்று முன்னுக்குச் செல்லலாம். அதிதீவிர இடதுசாரி செயல் முறைகளை நோக்கிச் செல்லும் போக்கு பற்றி எனக்கு வரையறைக்குட்பட்ட அளவிலாவது தெளிவுண்டு. அத் தெளிவின் அடிப்படையில் ஒரே ஒரு இறுதி வேண்டுகோளை விடுக்கிறேன். அதிதீவிரவாத இடதுசாரி செயல்முறைகள் இலங்கைப் புரட்சிக்கு பயங்கரமான தீங்கையும் அழிவையும் ஏற்படுத்தும் என்பதால் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்பதே அவ் வேண்டுகோளாகும். அவ்வாறு செயல்படுவது மிகவும் தெளிவாகவும், உண்மையாகவும் 71ன் அனுபவங்களை மறப்பதாகவே இருக்கும். நான் கட்சிக்கு எதிரியாக இருக்கமாட்டேன். நான் மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு உடன்படுவீர்களாயின் தோன்றியுள்ள நிலமை பற்றி முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு முழுத்தலைமையும் இராஜினாமாச் செய்து கட்சி மாநாட்டின் மூலம் புதிய தலைமையை தேர்ந்தெடுக்க இடமளிப்பதே செய்யக்கூடிய நல்ல காரியமாகும்.

இலங்கையின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கத்திற்கு வெற்றி உண்டாகுக! சோஷலிசப் புரட்சிக்கு வெற்றி உண்டாகுக!! எனக் குறிப்பிட்டே அவர் தனது கடிதத்தை முடித்துள்ளார்.

தொடரும்

# அறு(சு)வை

தற்போது மதங்களின் பெயரால் வியாபாரம் ஒரு புறத்தில் நடைபெற, மறுபுறத்தில் மதமாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மத மாற்றங்கள் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. இந்த மத மாற்றங்கள் எல்லாம் புராதன காலத்தில் இரண்டு வழிகளில் நடைபெற்றன. ஒன்றில் அரசனை கைக்குள் போட்டு, அரசனை மனம் மாற்றி விட்டால் போதும்.. மன்னன் மறுநாள் தண்டோராப் போட்டு 'இத்தால் சகலரும் அறிய... நான் மதம் மாறிவிட்டேன்.. நீங்களும் ஆகக் கடவீர்கள்' என்று சொல்ல, அரசன் எவ்வழியோ.. குடிகளும் அவ்வழியாவர்.

இது கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்த மன்னன் என்ருல்.. இல்லாமல் தானே கடவுள் என்று சொல்ல மன்னன் புறப்பட்டால், சாமியார்கள் காசி ராமேஸ்வரம் போக வேண்டியது தான்.

இங்கிலாந்து மன்னர் தான் இரண்டாவது திருமணம் செய்ய போப் அனுமதிக்கவில்லை என்பதால் புதிதாக மதத்தை உருவாக்கி நாட்டு மக்களையும் மாற்றி விட்டார்.

அடுத்த வழி.... அயல்நாடுகள் மீது படையெடுத்து.. கோயில்களை இடித்து... கோயில்களைக் கட்டி பலாத்காரமாக மதம் மாற்றுவது... இந்த பாபர் மசூதி விவகாரம் எல்லாம் இந்த கோல் மால்களின் எச்ச சொச்சம் தான்.

★ ★ ★

இந்த எச்சங்களை உடைத்து நொருக்கத் தான் பாபர் மசூதியை இந்துக்கள் உடைத்தார்கள். சரித்திரத்தை அழிக்க வேண்டும் என்பதற்காக, கட்டடங்களை உடைப்பதில் நம்மாளுங்களைக் கேட்டுத் தானே.. கோட்டை அடிமைச் சின்னம் என்று சொல்லி உடைக்கிருர்களாம். மாவிட்டபுரம் கோயில் கூட மாருதப்புரவல்லி என்ற சோழ இளவரசி தனது குதிரை முகம் மாற வேண்டி வந்து கட்டிய கோயில் தானே.. அது இந்திய ஆக்கிரமிப்பின் சின்னமல்லவா.. அதையும் இடிக்கலாமே..

கட்டடங்களை உடைத்து சரித்திரத்தை மாற்றலாம் என்ருல் இந்த மாவீரர் தூண்களுக்கும் அதே கதிதான் ஒரு காலத்தில் நடக்கும்.

★ ★ ★

திலீபன் நகர் கந்தசாமி கோவில் தற்போதிருக்கும் நிலம் கூட முன்னர் முஸ்லிம்களுக்கு சொந்தமானது என்பது உங்களுக்குத் தெரியுமா? காயல்பட்டணத்தில் இருந்து வந்தேறிய குடிகளான முஸ்லிம்கள் சாவகச்சேரிப் பக்கம் இருந்த பின்னர் நல்லூரில் குடியேறினர்களாம். அவர்கள் இருப்பதால் தங்களுக்கு கோயில் கட்டத் தடையாக இருக்கக் கூடும் என அந்த நிலத்தை தங்களுக்கு விற்கும்படி தமிழர்கள் கேட்க, முஸ்லிம்கள் மறுத்ததால் அவர்களின் கிணற்றில் பன்றியிறைச்சியைப் போட்டு அவர்களை விரட்டினர்களாம். பின்னர் மன்னரிடம் முறையிட்டுக் கொண்டு நாவாந்துறைப் பக்கம் குடியேறியதாக யாழ்ப்பாண வைபவமாலை சொல்கிறது.

இதனல் நல்லூர் திருவிழாவில் கற்பூரம் விற்பதற்கான உரிமையை மன்னர் பட்டயம் எழுதிக் கொடுத்ததாகவும் இன்றுவரை பரம்பரை பரம்பரையாக முஸ்லிம்கள் தான் அந்த வியாபாரம் செய்வதாகவும் முன்னர் யாரோ சொல்லக் கேள்வி..

★ ★ ★

அயோத்தியில் இந்துக்கள் உரிமை கோரியது போல முஸ்லிம்களும் கந்தசாமி கோயிலுக்கு உரிமை கோரக் கூடும் என்ற பயத்தில் தான் புலிகள் அவர்களை விரட்டி விட்டார்களோ என்னவோ? அன்றைய யாழ்ப்பாண மன்னருக்கு இருந்த நியாயம் கூட இன்றைய மன்னருக்கு இல்லையே!

★ ★ ★

சைவம், சமணம், பௌத்தம் என்று காலத்திற்கு காலம் மதம் மாறி சண்டையிட்டு இந்த இனங்கள் அழிந்தது தான் மிச்சம். கந்தரோடையில் புத்த இடிபாடுகள் இருப்பதை நிரூபிக்க சிறில் மத்தியூ பெரும் கஷ்டப்பட்டது ஒரு காலம்.

பிறகு வந்தான் வெள்ளையன்.. துப்பாக்கியையும் சிலுவையையும் தூக்கிக் கொண்டு. நாடு பிடிக்கவும் சந்தை தேடவும் ஐரோப்பிய மன்னர்களும் மகாராணிகளும் செய்த முயற்சியால் கீழைத்தேசம் அவர்கள் கையில் வர... அந்த 'ஆன்மாக்களை இரட்சிக்க' அந்தந்த நாட்டு மதபோதகர்களும் வந்தார்கள்.

## க(ல்)லாநிதி அறுஞர் கியூறியஸ் ஜி.



தென்னமெரிக்காவில் மாயர்கள், இங்கா இனத்தவர்கள் என்றாலும் சரி, ஆபிரிக்காவில் கறுப்பர்கள் என்றாலும் சரி, மதத்தை பரப்ப வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு...

★ ★ ★

இதைத்தான் ஜோமோ கென்யாட்டா அழகாகச் சொன்னார்... அவர்கள் வரும் போது அவர்களின் கையில் பைபிளும் எங்களின் கையில் நிலமும் இருந்தது. எங்களைக் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்யச் சொன்னார்கள். கண்ணைத் திறந்து பார்த்த போது அவர்களின் கையில் நிலமும் எங்கள் கையில் பைபிளும் இருந்தது..

★ ★ ★

யேசுநாதரின் சீடர்களில் ஒருவரான தோமையார் இந்தியா வந்து சென்னையில் தோமஸ் மலைப் பகுதியில் குடில் அமைத்து மத போதகம் செய்ததாகவும் பின்னர் அவரை இந்து மதவாதி ஒருவர் ஈட்டியால் குத்திக் கொன்றதாகவும் கதை... இதெல்லாம் சரித்திர காலத்திற்கு முந்தியது..

★ ★ ★

வள்ளுவர் கிறிஸ்தவர் என்ற வாதம் கூட இதன் அடிப்படையில் தான். ஆதிபகவன் முதற்றே உலகு என்று சொன்னது பைபிளில் முதலாவதாக வரும் ஆதியாகமத்தில் கடவுள் மனிதனை உருவாக்கியது இருக்கிறது.. இதனால் தான் ஆதியான பகவானைக் குறிக்கிறாரோ என்னவோ..?

இந்த வள்ளுவர் விடயம் சுவாரஸ்யமானது. சென்னை மயிலாப்பூரில் எழுபதுகளில் ஆயராக இருந்த அருளப்பா ஆண்டகைக்கு வள்ளுவர் கிறிஸ்தவர் என்ற கருத்தில் நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். இதை அறிந்து கொண்ட ஒருவர் ஆயரிடம் இதற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன, அவற்றைத் தேடி எடுக்க நிறைய பணம் தேவைப்படும் என்று கூறி நிறையப் பணத்தை வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டார். ஆயர் ஏமாந்தது தான் மிச்சம்.

★ ★ ★

வெள்ளையர்கள் போனதால் அவர்களின் நோய் பீடித்து தென்னமெரிக்க ஆதிக்குடிகளில் பல இனங்கள் அழிந்து விட்டன. போத்துக்கேயர், ஸ்பானியர்கள் சென்ற இடங்களில் கத்தோலிக்க மதத்தையும் டச்சுக்காரர்கள் புரட்டஸ்தாந்து மதத்தையும் பிரிட்டிஷார் ஆங்கிலிக்கன் மதத்தையும் என்று மதப்பிரசாரம் நடந்தது.

நம் நாட்டில் கல்விப் பீடங்கள் கூட இந்த மத நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் தான் இருந்தன.

★ ★ ★

சங்கிலியன் காலத்தில் புனித சவேரியார் வந்து மத போதகம் செய்ய அனுமதி கேட்க, சங்கிலியன் மறுத்திருந்தான். சங்கிலியின் மகன் இறுதியில் மதம் மாறியதாகவும் மன்னாரில் கத்தோலிக்க மதத்துக்கு மாறிய அறுநூறு பேரை சங்கிலியன் கொன்றதாகவும் கதைகள் உண்டு.

பின்னர் டச்சுக்காரர், ஆங்கிலேயர் எல்லாம் கோயில்களை இடித்து கோயில் கட்டினார்கள்.

இப்படி மத மாற்றங்களினால் இறந்தவர்கள் பலர்.

★ ★ ★

வெள்ளையர்கள் வந்த காலத்தில் சிங்களர்கள், தமிழர்கள் என்று பலர் பதவிகளுக்காக மாறியதுண்டு. பண்டாரநாயக்க, ஜெயவர்த்தன பெயர்களுடன் கிறிஸ்தவப் பெயர்கள் சேர்ந்து கொண்டன. டி சில்வா, பெரேரா என்ற போர்த்துக்கேயப் பெயர்களும் நேரடியாகவே வந்தன.

வடக்கிலும் நிறையப் பேர் மதம் மாறிக் கொண்டார்கள்.

★ ★ ★

ஆனால் வடக்கில் சாதி அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட பலர் மதம் மாறுவதற்கு சுவாமி ஞானப்பிரகாசர் காரணமானவர். கியூறியஸின் முன்னோர் மாறியதற்கும் காரணம் இவரே.

சுவாமி ஞானப்பிரகாசர் வைத்திலிங்கம் என்ற பெயரில் இந்துவாகப் பிறந்து பின்னர் மதம் மாறி கத்தோலிக்கராகி பலரை மதம் மாற்றியவர்.

இவரது மதம் மாற்றங்கள் பற்றி கே.டானியல் கனல் என்ற நாவல் எழுதியிருந்தார். அதில் மதம் மாறுகின்ற ஒரு தாழ்த்தப்பட்ட இன குடும்பத்தின் பிரச்சனைகளை சித்தரித்திருந்தார். அதில் ஞானப்பிரகாசர் சுவாமிகள் ஞானமுத்து சுவாமி என்ற பெயரில் சித்தரிக்கப்படுகிறார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் செயற்பாடுகளை மையமாக வைத்து கத்தோலிக்க திருச்சபை பற்றி வண. அன்ரன் மத்தியாஸ் தனது கலாநிதிப் பட்டத்திற்காக எழுதிய ஆய்வுக்கட்டுரை The Catholic Church in Jaffna 1875-1925 என்ற பெயரில் வெளியாகியிருக்கிறது. பெற விரும்புபவர்கள் தாயகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

★ ★ ★

கியூறியஸின் முன்னோர் கூட ஞானப்பிரகாசரால் மதம் மாறியவர்கள் தான். ஞானப்பிரகாசர் சைக்கிளில் போகும் போது சைக்கிளில் காற்றுப் போனால், வாழை நாரால் கட்டி அனுப்பி உதவுவதன் மூலம் சுவாமியாருடன் நெருக்கமாகி பின்னர் மதம் மாற முடிவு செய்தனர்.

அவர்கள் மதம் மாறுவதற்கு 'நயினார்கள்' எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். பெரும்பாலும் அடக்குமுறையிலிருந்து வெளியே வருவது தான் அவர்களது மதமாற்றத்திற்கான நோக்கமாக இருக்க வேண்டும். மத மாற்றத்தை எதிர்த்து ஊர் முற்றுகையிடப்பட்ட நிலையில் பதினாறு பேர் இரகசியமாக தப்பிச் சென்று பொலிசாரிடம் முறையிட்டனர். பின்னர் பொலிஸார் ஒருவர் அனுப்பப்பட்டு நிலைமை வழமைக்கு வந்தது. பின்னர் பொலிசார் போனதன் பின்னர் ஆயுதங்களுடன் உள்ளே நுழைந்தவர்கள் அட்டகாசம் செய்ய இவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

பின்னர் இன்னோரன்ன கெடுபிடிகளிலிருந்து தப்பித்துக் கொண்டு, பாடசாலை அமைத்து படிப்பித்து இன்று சில குருவானவர்களும் அங்கிருந்து வந்திருக்கிறார்கள்.

ஒருவேளை முன்னோர் மதம் மாறாவிட்டால் கியூறியஸ் கூட எங்காவது கூலிக்கு கொத்து வெட்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்திருக்கக் கூடும். யாருக்குத் தெரியும்?

★ ★ ★

கிறிஸ்தவ மதமும் சரி, கம்யூனிசமும் சரி.. யாழ்ப்பாணத்தில் வேரூன்றியதற்கு. அதுவும்

தாழ்த்தப்பட்ட இனங்களில், காரணம் யாழ்ப்பாண சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும் தான் என்பதை மறுக்க முடியாது. அன்று பாடசாலைக் கல்வியே அனுமதிக்கப் படாமல் மலிந்த கூலிகளாக தமிழர்களில் ஒரு பகுதியினரை அடக்கி வைத்திருந்தவர்களின் வாரிசுகளில் பலர் தான் இன்று சிங்களவர்கள் எங்களுக்கு மறுக்கின்ற பல்கலைக்கழக ஆசனங்களுக்காக ஆயுதம் தூக்கிப் போராடுவதை நியாயப் படுத்துகின்றவர்கள்.

கோயிலுக்குள் சென்று வழிபட முடியாது என்ற நிலையில் அவர்கள் இந்துக்களாக இருப்பதில் என்ன பயன்? ஒரு மதத்தைக் காரணம் காட்டியே அடக்குவதாக இருந்தால் அந்த மதத்தில் இருப்பதில் பயன் இல்லை என்று நம் முன்னோர்கள் நினைத்திருக்கக் கூடும். யாழ்ப்பாணத்தவர்களின் நியாயம் என்பது சிக்கலானது. அதில் பொதுமை கிடையாது. தனக்கு சாதகமானது எதுவுமே யாழ்ப்பாணத்தானுக்கு நியாயம் தான்.

★ ★ ★

கியூறியஸின் பேத்தியார் ஒரு சுவாரஸ்யமான மதவாதி.. இவர் இந்துவாகப் பிறந்து பின்னர் பெந்தக்கோஸ்தே மதத்திற்கு மாறினார். காரணம் இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்தவர். பின்னர் பேரனுரை மணம் புரிவதற்காக கத்தோலிக்கரானுர்.

கியுறியஸின் அம்மா கூட இந்துப் பெண் தான். பின்னர் தந்தையாரை மணம் முடிப்பதற்காக மதம் மாறியவர்.

★ ★ ★

இந்த மத மாற்றங்கள் ஒரு குறித்த காலத்திற்கு பின்னர் ஸ்தம்பித்து விட்டன. காரணம் இந்த கிறிஸ்தவ மதங்கள் ஒரளவுக்கு வேருன்றி விட்டிருந்தன. அராபியர்களால் மதம் மாற்றப்பட்ட முஸ்லிம்களும் தங்களை நிலைநாட்டிக் கொண்டனர்.

பிற்காலத்தில் சிறில் மத்தியூ என்ற பௌத்தரின் கருணையால், சில இடங்களில் சிலர் பௌத்த மதத்தை தழுவிக் கொண்டனர். அது கூட தாழ்த்தப்பட்ட இனத்தவர் மத்தியில் தான். இவர்கள் மதம் மாறியதற்கு இவர்களுக்கு வழங்கப்பட்ட அதீதமான உறுதிமொழிகளும் அடக்குமுறையும் காரணங்கள். பின்னர் அது மழுங்கி விட்டது.

★ ★ ★

தமிழகத்தில் பிற்காலத்தில் வளைகுடா நாடுகளின் பணத்தினுல் பலர் முஸ்லிம்களாக மதம் மாற்றப்பட்டனர். இது கூட சமூக அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தான். சமூக ஏற்றத்தாழ்வுகளை மாற்ற முயற்சிக்கா விட்டால் இது நடக்கக் கூடியதுதான்.

★ ★ ★

பிற்காலத்தில் வந்து சேர்ந்தன மற்ற கிறிஸ்தவ சபைகள்... இவர்கள் தீவிரமாக மதம் மாற்றுவதற்கு பல முயற்சிகள் செய்தார்கள். அதில் தான் இல்லம் தோறும் நற்செய்தி, சத்தியவசனம் போன்றன இருந்தன...

ஜெகோவாவின் சாட்சிகள் என்ற அமைப்பு விழித்தெழு, காவற்கோபுரம் என்ற சஞ்சிகைகளை வினியோகித்தன.

இந்த சத்தியவசனம், இல்லம் தோறும் நற்செய்தி என்பன தபால் மூலம் சமயம் போதித்தன. இந்த அனைத்திலும் கியூறியஸ் சேர்ந்து படித்து நற்சான்றிதழ்கள் வாங்கினுன் ஒரு காலத்தில்... காரணம்... ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது எங்கள் பெயருக்கு யார் கடிதம் போடப் போகிருர்கள்? சொந்தப் பெயரில் கடிதம் வரும் போது பெரும் குஷி.. ஏதோ பட்டப்படிப்பு மாதிரி படித்து முடித்து அழகான சான்றிதழ்களை வாங்கி வைத்தது தான் மிச்சம்.

கேள்விகள் எப்போதுமே ஆம், இல்லை என்ற பதில்களைக் கொண்டிருக்கும். எல்லாமே பிழையாக இருந்தாலும் நற்சான்றிதழ் மட்டும் பலருக்கு வந்து சேர்ந்தது.... ஆனுல் இந்த சான்றிதழ்கள் எந்த வேலைக்கும் உதவவில்லை. சும்மா ஒரு பொழுது போக்குத் தானே... காலப் போக்கில் இந்த நிறுவனங்கள் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. ஒருவேளை இவர்களுக்கான நிதியுதவிகள் நிறுத்தப்பட்டனவோ என்னவோ?


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**



**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**



இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.*

*ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*


## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்


✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets
✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

SIVA'S TRADING CO. LTD
321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

சிவாஸ் ரேடிங் கோ
3852 FINCH AVE EAST
KENNEDY/FINCH

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

P.S.S.T

எக்கோ, தொம்சன் கசட்டுகள் 1.99
8 லேசர் இசைத்தட்டுக்கள் 29.99
வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம்
VIDEO TRANSFER (ANY SYSTEM) 8.99

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினல்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

TEL:609-0141

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்